Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI




சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | மாசி 26 | ஞாயிற்றுக்கிழமை (10.03.2002) | தொலைபேசி 3378 | ஒலி 81

# பிரதமர் ரணில் எதிர்வரும் 15ந் திகதி யாழ் வருவார்!

## யாழ். கண்டிவீதியையும் திறந்துவைப்பார்?

(நமது நிருபர்)

**ஐக்கியதேசிய முன்னணி அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இம்மாதம் 15ந் திகதி வெள்ளிக்கிழமை முதற்தடவையாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.**

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் யாழ்ப்பாண வருகையுடன் யாழ்-கிளிநொச்சி கண்டிவீதி பயணிகள் போக்குவரத்துக்கு திறந்துவைக்கப்பட விருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.**

தமிழீழத்துக்கான ஆயுதப் போர் ஆரம்பமாகி சுமார் 20வருடங்களின்பின் தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகியதை அடுத்து முதற்தடவையாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எதிர்வரும் 15ந் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

யாழ்ப்பாணம்வரவுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நடைபெற்று வரும் இனயுத்தத்தினால் சீரழிந்து கிடக்கும் யாழ் குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் நேரில் விஜயம் செய்து பார்வையிடவுள்ளார்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நிரந்தர யுத்தநிறுத்தத்திற்கு வழிவகுத்துள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்தாகி 30நாட்களுக்குள் யாழ்-கிளிநொச்சி கண்டி வீதியூடான தரைவழிப்பாதை

(8ம் பக்கம் பார்க்க)

## கண்டி வீதியூடான பஸ் சேவை
## புலிகளின் அனுமதியை பெற பிரதமர் முயற்சி

(கொழும்பு)

கண்டி வீதியூடான தனியார் பஸ் சேவையை ஆரம்பிப்பது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அனுமதியை நோர்வே மூலமாக பெறுவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நடவடிக்கை எடுத்துள்ளார். என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கை இன்னும் இரண்டொரு தினங்களில் அரம்பமாக இருப்பதாகவும் இது சம்பந்தமாக நோர்வேப் பிரதிநிதிகளுடன் பேசி அனுமதியைப் பெற்றுத்தருவதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் கெமுனு விஜேரட்ணவிடம் பிரதமர் உறுதியளித்துள்ளார். (வ)

## யாழ் – மட்டு – வவுனியாவில் புலிகளின் அலுவலகம் அமையும்
### கரிகாலன் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்காலத்தில் முழுமையான அரசியல் நீரோட்டத்தில் இணைவரென விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை அரசியல் பொறுப்பாளர் கரிகாலன் தெரிவித்துள்ளதாக. இலங்கை வானொலி நேற்று மாலை செய்தி வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்துடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டு 90 நாட்கள் சென்ற பின்னர் அரசியல் நடவடிக்கைகள் ஆரம்பமாகும்..

(8ம் பக்கம் பார்க்க)

## துணைவேந்தருக்கு இன்று மணிவிழா



(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசியரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் மணிவிழா இன்று காலை 9.30மணிக்கு நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வை யாழ் பல்கலைக்கழக சமூகம் ஏற்பாடு செய்துள்ளது:

இதேவேளை பொதுமக்களின் ஏற்பாட்டில் துணை வேந்தரின் மாபெரும் மணிவிழா எதிர்

(8ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு செல்வதற்கு புலிகள் அனுமதி கோரினர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக எதிர்வரும் 22ந் திகதி வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு விடுதலைப் புலிகள் செல்லவுள்ளனர்.

இதற்கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சிடம் புலிகள் கோரியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட சிவில் இணைப்பதிகாரி லெப்டினன் கேணல் எஸ்.எல். குணசேகர தெரிவித்துள்ளார்.

அரசும் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்

(8ம் பக்கம் பார்க்க)

### வவுனியாவில் தமிழ்க் கட்சிகள்
## ஆயுதம் ஒப்படைக்க நாளை வரை அவகாசம்

(வவுனியா)

வவுனியாவிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகள் நாளை திங்கட்கிழமை முற்பகல் பத்து மணிக்கு முன்னதாக தம்மிடமுள்ள ஆயுதங்களை வவுனியா இராணுவத் தலைமையகத்தில் ஒப்படைக்குமாறு இராணுவப் பொறுப்பதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா இராணுவத் தலைமையகத்தில் நேற்றுக்காலை இராணுவத் தளபதி தலைமையில் கூட்டமொன்று நடைபெற்றது. வவுனியாவில் நிலை கொண்டுள்ள தமிழ் அரசியல் கட்சிகளான புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய கட்சிகளின் பிரமுகர்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் இராணுவத் தளபதி உரையாற்றும் போது:-

வவுனியாவில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளின் பாதுகாப்பிற்காக அரசினால் வழங்கப்பட்ட ஆயுதங்கள் அனைத்தையும் நாளை மீளளிக்க வேண்டுமெனவும், கட்சிகளுக்குரிய பாதுகாப்பை இராணுவத்தினர் அல்லது பொலிஸார் வழங்குவர் எனவும் தெரிவித்தார்.

ஈ.பி.டி.பியினருக்கு இக்கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும் அக்கட்சி இதில் கலந்து கொள்ளவில்லை (ந-4)

## இத்தாலி சென்ற அறுபது இலங்கையரை காணவில்லை
### படகு கவிழ்ந்ததில் சோகம்

(ரோம்)

இத்தாலிக்குள் சட்ட விரோதமாக நுழைய முற்பட்ட சுமார் 60 இலங்கையர்கள் படகு கவிழ்ந்ததில் காணாமல் போய் விட்டதாக அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இத்தாலிக்குள் சட்ட விரோதமாக நுழைவதற்கு சென்று கொண்டிருந்தவர்களின் படகு சிசிலிக்கும், ருணிசியாவுக்குமிடையில் உள்ள கடற்பிராந்தியத்தில் காணாமல் போய் விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

காணமல் போனவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ள வேளை 11 பேர் மீட்கப்பட்டுள்ளதாக பிந்திய தகவல் ஒன்றும் கிடைத்துள்ளது.

சுமார் 71 பேரை ஏற்றிச் சென்ற இச்சிறிய படகு எங்கிருந்து எப்போது புறப்பட்டுச் சென்றது என்பன போன்ற தகவல்கள் இதுவரை கிடைக்கவில்லை. (வ)

## கஜுபோவிலவில் கோஷ்டி மோதல்

களுபோவிலவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கிரனெற் வீச்சு சம்பவத்திற்கும் அரசியலுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லையென களுபோவில பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.களுபோவில பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடந்து கொண் டிருந்த வேளை இரண்டு கோஷ்டியினருக்கிடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்தை அடுத்து நடந்த கிரனெட்வீச்சினால் ஒரு பெண் உட்பட ஐவர் பலியாகியும் 27பேர் காயமடைந்தும் இருந்தனர். (வ)

## ஜேர்மனியில் ஆர்ப்பாட்டம்

(பேளின்)

ஜேர்மனியின் தலைநகர் பேளினில் நேற்று ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று இடம்பெற்றுள்ளது. அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட நிலையில் ஜேர்மனியில் இருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவதற்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆறுமுகம் ராஜன், மயில்வாகனம் மயூரன் ஆகிய இருவரையும் திருப்பி அனுப்ப வேண்டாம் எனக்கோரியே இவ் ஆர்ப்பாட்டப்பேரணி நடை பெற்றுள்ளது. (ந.4)

## கைத்தொழில் அமைச்சர் 12ந் திகதி யாழ் வருவார்

(யாழ்ப்பாணம்)

கைத்தொழில் அமைச்சர் றோகிந்த போகொல்லகம ஒரு நாள் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளார் என அரச அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ் வரவுள்ள கைத்தொழில் அமைச்சருடன் அமைச்சின் உயர் அதிகாரிகள் மற்றும் கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு கைத்தொழில் முயற்சியாளர்களும் வரவுள்ளனர்.

இவர்கள் யாழ் செயலகத்தில் உள்ளூர் வெளியூர் கைத்தொழில் முயற்சியாளர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதுடன் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களையும் சந்திப்பார். (வ)

## சிறு விளம்பரம்

### றேகி-தியானம் ஞானம்

ஞானிகள் கண்ணால்பார்த்தும், கையால் முட்டியும், கலை ஆடியும் நோய்களை மாற்றியுள்ளனர். றேகிஞானமும் பல காலம் மாறாத நோய்களைமாற்றி வருகிறது. நோயுற்ற இடத்தில் தொட்டுத் தடவினால், குணப்படுகிறது. இது பற்றி இலங்கை வானம்பாடி சேவை தெளிவாக விளக்கியுள்ளது. இது மந்திரம் அல்ல, தெய்வ ஞானம். வாணி 22/1, கச்சேரி வீதி, யாழ்ப்பாணம்.

(4807)

### வாணி சோதிடம்

237/16, K. K. S வீதியிலும் பெருமாள் ஆலயமுன் யாழ் பாடி வீதியிலும் வாணி சோதிடம் நடைபெறுகிறது. உங்கள் கல்வி, தொழில் வாழ்வு நோய் காதல் பற்றித் தெரிந்து கொள்ளலாம். கூறும் பலன், பொய்யாயின் பணம் வாபஸ். (திருமாங்கல்ய சேவையும் நடைபெறுகின்றது). சோதிடர் சிவகணேசன் 22/1, கச்சேரிவீதி நல்லூர்.

(4807)

### தேவை

பிளேட்டன் மெசின் மைன்டர், பைன்டிங்வேலை தெரிந்த பெண்பிள்ளைகள்தேவை நேரில்வரவும். சரவணா அச்சகம், 233 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். (ஏ3687)

### தேவை

எமது ஸ்ருடியோ கிளை பிரிவுகளுக்கு போட்டோப் படப்பிடிப்புதெரிந்தவர்களும் பயிற்சியாளர்களும் தேவை இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். யாழ் தேவா ஸ்ருடியோ 424 3 கே.கே.எஸ்வீதி யாழ்ப்பாணம். (4801)

## கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைவாசியைக் குறைக்கக் கோரியும் அரசியலில் பெண்களுக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டுமென்று கோரியும் பெண்கள் அமைப்புகள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றை கொழும்பில் நடத்தியுள்ளன.

கொழும்பு லிப்டன்சதுக்கத்தில் இடம் பெற்ற இவ்ஆர்ப்பாட்டப் பேரணியில் பெருந்தொகையான பெண்கள் கலந்து கொண்டனர்.

அரச சார்பற்ற பெண்கள் ஒன்றியம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

(வ)

# தேசாபுத்திபலனும், கோசரபலனும் சேர்த்து ஆராய்ந்தே பலாபலன்கள் அறிதல் வேண்டும்

**சோ**திடத்தில் பலன் சொல்லுமுன் தெசாபுத்தி பலனுடன் கோசர பலனையும் அறிந்தே சொல்ல வேண்

## இராசி பலன்

10- 3- 2002
(மாசி 26, ஞாயிறு)
துவாதசி பி. இ 2. 35வரை
உத்தராடம் காலை 6. 41 -வரை
ராகு காலம் 4. 54- 6. 24
நல்ல நேரம் 9. 24 10. 54
அமிர்தம்

**மேடம்**
தொழில் சிறப்பு, காரிய அனுகூலம், அதிகாரம், எதிர்பாராத நன்மை.

**இடபம்**
கட்டுப்பாடு, முயற்சி தாமதம், பிரயாணம், தந்தைவழி உறவு.

**மிதுனம்**
எதிர்பாராத பிரச்சினை, முயற்சி தடங்கல், வியாதி, பிரயாணக் கஷ்டம்.

**கடகம்**
சுவாரஸ்யம், காரிய அனுகூலம், தொழில் நன்மை, தனவரவு.

**சிங்கம்**
காரிய அனுகூலம், சந்தோசம், ஆரோக்கியம், தனவரவு

**கன்னி**
குடும்பமனஸ்தாபம், காரிய தாமதம், தாழ்ந்த சுபாவம், சத்துருஜெயம்.

**துலாம்**
உடல் சோர்வு, தாய்வழி உறவு, காரியதாமதம், மனஸ்தாபம்.

**விருச்சிகம்**
நல்லசம்பவம், காரிய சித்தி, தனவரவு, வாக்குப் பலிதம்.

**தனுசு**
காரிய தாமதம், பொருள் விரயம், திடீர் நன்மை, நண்பர்கள் உதவி,

**மகரம்**
ஜனவசியம், மனமகிழ்ச்சி, காரியம் கைகூடும், சயன சுகம்.

**கும்பம்**
உணர்ச்சிவசப்படல், காரிய தாமதம், குடும்ப சுகம், தன விரயம்.

**மீனம்**
பெருமையான சம்பவம், காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, தெய்வ சிந்தை.

(பழையநேரப்படி கணிப் பிடப்பட்டது)

**வளவன்**

டும். அநேகமாகத் தெசா புத்தி பலன்கள் சொல்வது உதயலக்கினத்தில் இருந்து கணக்கிட்டேயாகும். ஆனால் கோசர பலன் சொல்வது இராசிச் சக்கரத்தில் சந்திரன் நின்ற இடத்திலிருந்தே அதாவது சந்திர லக்கினத்திலிருந்து கணக்கிட்டேயாம்.

**சனியும், வியாழனும்**

நவக்கிரகங்கள் ஆகாயத்தில் எப்பொழுதும் உலாவிக்கொண்டேயிருக்கின்றன. சனி, இராகு, கேது, வியாழன், செவ்வாய், வெள்ளி, புதன், சூரியன், சந்திரன், முறையே கூடிய வேகத்தில் செல்கின்றன. மிகக் கெதியாகச் செல்லுங் கிரகங்களின் பலன் அவ்வளவு தோற்றுவதில்லை. சனி, ராகு, கேது, வியாழன் இவையே உள்ளவற்றுள் மிகவும் மெல்லச் செல்கின்றன. சனி ஒரு இராசியை $2\frac{1}{2}$ வருடத்தில் கடக்கிறது. இராகு கேது $1\frac{1}{2}$ வருடத்தில் கடக்கின்றன. ஆனால் இவையிரண்டும் சாயற்கிரகங்களாகையால் இராகு சனியின் பலனையும், கேது செவ்வாயின் பலனையும் கொடுக்கின்றனவென அனுபவத்தில் காணப்படுகின்றது. வியாழன் ஒரு இராசியை ஒரு வருடத்தில் கடக்கிறது. எல்லாக் கிரகங்களுள்ளும் சந்திரனே மிகக் கெதியாகச் செல்கின்றது. சூரியன், புதன், வெள்ளி, செவ்வாய் ஆகியன ஒரு மாதம் முதல் $1\frac{1}{2}$ மாதம் வரை எடுக்கின்றன. கெதியாகச்செல்லும் கிரகங்களையும், சாயற் கிரகங்களையும் தவிர்த்து சனியையும், வியாழனையுமே சாதாரணமாகக் கவனிக்கின்றனர்.

இக்கிரகங்கள் பலன் கொடுப்பது எந்தக்காலத்தில் ஒரு இராசியில் முதலிலா? கடைசியிலா? நடுவிலா? அல்லது நெடுகவா? என்ற விபரம் வருமாறு,

1. சூரியனும் செவ்வாயும் ஒரு இராசியின் முதல் 10 பாகைக்குள்.
2. வியாழனும் வெள்ளியும் ஒரு இராசியில் 10 தொடக்கம் 20 பாகை மட்டும்.
3. சனியும் இராகுவும் - ஒரு இராசியின் 20 பாகை தொடக்கம் 30 பாகை மட்டும்.
4. சந்திரன், புதன், கேது: இராசி முழுவதிலும்.

**கோசர பலன்**

இக்கிரகங்களின் கோசர பலன் பார்க்கும்போது அவற்றின் தற்கால சேர்க்கை, பார்வை முதலியவற்றையும் கவனித்தே பலன்சொல்ல வேண்டும். நல்ல கிரகம் நல்ல பலனையும் தீய கிரகம் தீயபலனையும் தருவார்கள் என்பது பொதுவிதி. ஆனால் தெசை, புத்தி, அந்தரம்,

### சோதிடபலன்

உண்டு. மும்மூன்று நட்சத்திரங்களுக்குஒருதெசை உரியது. அச்சுவினி முதலாம் நட்சத்திரம் அத்துடன் ஒன்பதைக் கூட்டினால் பத்தாம் நட்சத்திரம் மகம் அத்துடன் 9 ஐக் கூட்டினால் 19 ம் நட்சத்திரம் மூலம் இவற்றிற்குரிய தெசை கேது தெசையாகும். அடுத்த தெசை வெள்ளிதெசை. இவற்றிற்குரிய நட்சத்திரங்கள் இரண்டாவது பதினொராவது இருபதாவது என்பனவாகும். அப்படியே 3ம், 4, ம் 5 ம் 6 ம், 7 ம் 8 ம் 9 நட்சத்திரங்களையும் எடுத்து ஒன்பதைக் கூட்டி மும்மூன்று நட்சத்திரங்களுக்குஒருதெசையாய் அடுத்த ஏழு தெசைகளையும் அவற்றிற்குரிய நட்

**செ. சோதிநாதன்**

நாள் என்று பிரிவுகள் இருப்பதனால் நல்ல கிரகத்தின் காலத்தில் தனியே நல்ல பலனையே தரும் என்று நினைப்பது தவறு. அது போலவே கெட்ட கிரகத்தின் காலத்தில் கெட்ட பலனையே தரும் என்று நினைப்பதும் தவறு. காலச்சக்கரம் இடைவிடாது சுழன்று கொண்டே போகிறதாகையால் நல்லகிரகம், தீயகிரகம் என்பன மாறிமாறிச் சீக்கிரமாய் வந்த வண்ணமே இருக்கின்றன. நல்ல கிரகத்தின் காலத்தில் கூடிய நல்ல சம்பவங்களும், தீய கிரகங்களின் காலத்தில்கூடிய கெட்ட சம்பவங்களும் நிகழும். ஆகையால் குருதெசை சுக்கிர தெசை மிகநல்ல பலனையே தருமெனவும் எண்ணுவது தப்பு. அவர்களுடைய நிலை அதாவது நிற்குமிடம், கூடிநிற்கும் கிரகங்கள், பார்க்கும் கிரகங்கள், சொந்தவீடோ, உச்சவீடோ நட்பு வீடோ, பகை வீடோ நீசவீடோ, என்று பார்த்து பலனை அறிந்து கொள்ளவும். கோசர பலனையும் கவனிக்க வேண்டும்.

**கிரகசம்பந்தங்கள்**

எப்பொழுதும் ஒரு கேந்திராதிபதியும், கோணாதிபதியும் கூடினால் மிகநல்ல பலனையே தருவார்கள், ஆகக்கூடியபலன்கள் உச்ச கேந்திராதிபதியான பத்தாதிபதியும் பிரபல கோணாதிபதியான ஒன்பதாதிபதியும் கூடினால் நடக்கும். கேந்திரங்கள் 4,7,10,10ம் வீடுகளாகும், கோணங்கள் 5, 9ம் வீடுகள், உதயலக்கினம், கேந்திரம், கோணம், இரண்டிற்கும் பொதுவானது. கிரகங்கள் தங்கள் பலன்களைத் தங்கள் தெசைகளிலும், புத்திகளிலும், கொடுக்கும். கோசரத்தில் எப்பொழுதும், கொடுக்கிறார்கள்.

எவ்வளவு காலம் முந்திக் கொடுப்பார்களென்பதைப் பின்வருமாறு அறியலாம். சனி ஆறு மாதம் முந்திக் கொடுக்கும். இராகு கேது மூன்றுமாதங்களும் வியாழன் இரண்டுமாதமும் செவ்வாய் எட்டு நாளும் புதனும் வெள்ளியும் ஏழுநாழும் சூரியன் ஐந்து நாளும் சந்திரன் ஒரு மணித்தியாலம் 12 நிமிஷமும் பலன்களை முந்திக் கொடுக்கும். ஸ்திர இராசிகளுக்கு ஒன்பதா திபதிகள் நல்லபலனைக் கொடா. உபய இராசிகளுக்கு ஏழாதிபதிகளும் சர இராசிகளுக்கு பதினொராதிபதிகளும் நல்ல பலன்களைக் கொடுக்க மாட்டா.

நட்சத்திரங்களையும் அவைகளுக்குரிய தெசைகளையும் மனதில் வைக்க ஒரு வழி சத்திரங்களையும் அறிந்து கொள்ளவும்.

**சூழ்நிலை அறியவேண்டும்**

சோதிடம் சொல்லுமுன் சாதகனின்ஊர், தேசம், குடும்பம், கொள்கைகள், வாழ்க்கை முறைகள், அரசாங்கமுறைகள் வயது, முதலியவற்றைக் கவனித்தே பலன் சொல்ல வேண்டும். ஒவ்வொரு கிரகங்களும் ஒவ்வொரு வீட்டில் நிற்பதால் ஒவ்வொரு பலன் ஒன்றும் ஒவ்வொரு கிரகத்தின் தெசையிலும், புத்தியிலும் ஒவ்வொரு பலன் என்றும் சோதிடப் புத்தகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இவற்றை அப்படியேஎடுத்துக் கொள்ளக்கூடாது. உதாரணமாக ஒருவருக்கு அறுபது வயதுக்குப்பின் நல்ல வெள்ளி தெசை வருவதால் பயன் என்ன? அவருக்கு அனுபவிக்கும் வயது தப்பிவிட்டதே. இன்னொருவருக்கு அவருடைய ஜாதகத்தின்படி யோககாரகன் அல்லது பத்தாதிபன் தெசை குழந்தை வயதிலேயே வந்து முடிவுற்றால் அதனால் என்ன பயன்? சில வேளை அவன் வாழ்க்கையில் அத்தெசையே வராது.

பெண்கள் ஜாதகத்தில் ருதுவான காலந்தொட்டு விவாகத்தைப்பற்றியும்புருஷனைப் பற்றியும், பிள்ளையைப் பற்றியும் எழுதுவதில் என்ன பிரயோசனம் இக்காலத்தில் பெண்கள் இருபத்தைந்து வயது மட்டும் படிக்கிறார்கள் இப்படி எழுதினால் சாதகம் பிழை என்பதா? அல்லது உண்மையாக நடக்கப் போவதைச் சோதிடத்தால் அறியமுடியாது என்பதா? ஒரு பெரிய உத்தியோகத்தரின் மகனுக்குப் பதினட்டு வயது தொடக்கம் உத்தியோகம் உத்தியோக உயர்ச்சி எழுதப்படலாம். ஆனால் உண்மையில் அப்பிள்ளை படிக்க முடியாதவனாய் உத்தியோகம் பார்க்க முடியாதவனாய் இருக்கக் கூடும். ஆகையால் ஜாதகம் எழுதும் முறையை மாற்ற வேண்டும்.

## குறிப்பறிந்து

இன்றைக்கு பல நூறு மாணவர்கள் பயன் பெறுகின்றனர். மாணவர்களின் கால விரயத்தைக் கருத்திற் கொண்டு புகுமுகச் சித்தியின் பின் இரு வருடங்கள் அலையாது ஒரு வருடத்துக்குள்ளே வாய்ப்பும் வசதியும் செய்து கொடுத்த ஒரே துணை வேந்தர் இவரே. அந்த வகையில் காலத்தின் கனதியை, பெறுமதியை நன்குஉணர்ந்தவர்.

**பல்கலை புதுப் பொழிவு**

சிதைந்து கிடந்த பல்கலைக் கழகத்தை உருக்குலையாது செயற்படுத்திய செயல்வீரன், இன்றைய புதுப் பொலிவு ஒப்புரவாளர் பொன். பாலசுந்தரம் பிள்ளையின் முன் முயற்சி என்றால் மிகையாகாது. அன்றியும் யாழ்ப்பாணத்து மாணவர்களின் தனித்துவம் பேணும் தலைமைக்கல்விக் கோயில் தளராது கிளை விடுவதும் இவராலேயே, சேர் பொன். இராமநாதனின் கனவை நினைவாக்கிய பொன். பாலசுந்தரம்பிள்ளை போற்றுதற்குரியவர்.

மக்கள் அனைவருடனும் சரளமாகப் பழகி இன்புறுபவர், இயலுமானவரை அவர்களது துன்பம் துடைப்பவர். இவரது காலத்தேஏற்படுத்தப்பட்ட வேலை வாய்ப்புக்கள் ஏராளம், பக்குவமாகச் செயற்படுத்தப்பட்ட பதவி உயர்வுகள் அநேகம். கல்விமானும், நிர்வாகத் திறன் மிக்க அன்பு நெஞ்சம் கொண்டவருமான துணை வேந்தர் நீள நினைந்து நெஞ்சம் தழைக்கஏதுவானார். நீடு கல்விப் பணி, சமூகப்பணி செய்து ஒப்புரவொடு ஒளிர்வாராக.

★ இன்று வண்ணை சிவன் கொடியேற்றம்

### தொல்லையது இல்லையெனும் நிலைவேணும்

சொல்லழகுச் சந்திரனைச் சில்லெனுமுன் சிரமணிந்து
சொன்னமுறை வெந்தபொடி-மெய்பூசி
சொந்தமென அங்கமதில் பந்தமொடு தங்கியணை
தையல்வா லாம்பிகை - துணையோடு
நல்லதொனித் துந்துபியும் பல்லொலிசெய் மத்தளமும்
நம்மறையும் பன்மறையும் - நவிலோசை
நந்தமது சிந்தையதை விந்தையொடு கொள்ளைகொள
நத்துமலர் நின்றெறியக் - கொடியேறி
வல்லநவ சந்திதொறும் சொல்லுதவர் நின்றுதொழ
வல்லருளை நல்கவரும் - வைத்தீசா
வந்துதொழு மன்பரவர் தந்துயரம் வெந்துவிழ
வண்மையுள தின்னருளைத் - தரவேணும்
அல்லலது சொல்லியழு துள்ளுருகு மன்பருளத்
தொல்லையது இல்லையெனும் - நிலை வேணும்
அந்திபக லென்றுநிதம் வந்துபதம் நின்றுதொழ
அள்ளியருள் வண்ணையுறை - இறையோனே!

நாயன்மார்கட்டு இராசையா - குகதாசன்

## மகளிர் தின விழா

அளவெட்டி மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடாத்தும் மகளிர்தின விழா நாளை பி. ப 1. 00மணிக்கு அளவெட்டி மேற்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் திருமதி சி. செல்வராணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிவடக்கு பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம்கலந்து கொள்ளவுள்ளார்.

(உ- 237)

# மணிவிழா வாழ்த்து!

மனிதநேயமும், அறிவு மேம்பாடும், சமூக நலன் பேணுதலும், ஒன்றாக அமைந்த பேருள்ளம் படைத்தவர் தான் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்கள். நெருக்கடியில் ஞானம் பிறக்கும் என்றுசொல்வார்கள். அந்தவகையில் இனப்பகையும், மொழிப்பகையும் உச்ச நிலையடைந்து யாழ்ப்பாணத்து மக்கள் எல்லோரும் இடம் பெயர்ந்து ஓடிய காலம் அது. ஆனால் 1996 ம் ஆண்டு சிறிது பதட்டம் தணிந்ததும் அவரவர் தத்தம் இல்லங்களுக்குத் திரும்புவதற்கு விரும்பினர். இதே காலத்தில் வைத்தியசாலைகள், கல்விக் கூடங்கள், பல்கலைக்க கழகம் ஆகியனவும் அமைதி நிலையை நோக்கிச் சொந்த இடங்களுக்குத் திரும்பிவரக் கூடியதாக இருந்தன. ஆனால் பொறுப்பேற்பவர்கள் பின்னடையத் தொடங்கினார்கள். இந்த நிலையில் பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் முன்வைத்த காலைப் பின்வையாது பல்கலைக்கழகம் உரிய இடத்தில் பணியாற்றுவதற்குத் துணிந்து செயற்பட்டார்.

'காலத்தினால் செய்த உதவி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது'

என்பதற்கேற்ப இந்நிகழ்வு மிகமிகப் பாராட்டுதற்குரியதாக அமைந்தது.

பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் எம்மால் போற்றப்பட வேண்டிய செந்தண்மையாளர். நெருக்கடியிலும் இன்முகமும், இன்சொல்லும் இவருக்கு அணிகலன்களாக அமைகின்றன. தான்கற்ற விசேட புவியியல் துறையில் சிறந்த ஆய்வுக்கட்டுரைகளை எழுதி கற்றோர் மத்தியில் பெருமதிப்பைப் பெற்றவர் இவர் ஏனைய துறைகளிலும் விரிந்த அறிவுடையவராக விளங்கியமையாலும், ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் புலமை பெற்றவராக இருந்தமையாலும் சொற்பெருக்காற்றும் திறம் இவரது கைவந்த கலையாக இருக்கிறது. அத்துடன் காட்சிக்கு எளியராகியும் கடுஞ்சொல் பேசாதவராகவும் அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற பண்புகளுடைய சான்றோனாகவும் இப்பெரியார் விளங்கி வருவது கண்கூடு.

எம்போன்றார் சிலரை பல்கலைக்கழகப் பட்டமளிப்பு மேடைக்கு அழைத்து சமுதாயத்துக்கு நாம் ஆற்றிய ஒரு குறுகிய பணியை தமிழுலகம் அறியச் செய்து 'கலாநிதி'ப்பட்டம் வழங்கி எமக்குக் கௌரவம் அளித்தவரும் பெரியார் அவர்களே. இந்நிகழ்வு பல்கலைக் கழகத்தின் சரித்திரச் சான்றான நிகழ்வாகும்.

மணிவிழாக்காணும்இவ்வேளையில்அன்னாரையும்அவர்தம் பாரியாரையும் மக்கட்செல்வங்களையும் வாழ்த்திவணங்கி ஆசி கூறி அமைகின்றேன்.

கலாநிதி செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி

தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

# குறிப்பறிந்துசெயலாற்றும்குணக்குன்று

# துணைவேந்தர்பாலசுந்தரம்பிள்ளை



வையகம் பயனுற வாழ்வதே மானிடவாழ்வின் சிறப்பு. எங்கள் மத்தியில் உலா வரும் ஒப்புரவாளர், துணை வேந்தர், பல்துறைவிற்பன்னர், பழக இனியவர். பிறர் தமர் பாரா பெரியவர், மக்களை அணைந்து அணைக்கின்றபேராளன், பேராண்மை மிக்க கல்வியியலாளன், வேலணை தந்த வியத்தகு முத்து, துன்பத்தின் போது துயர் துடைக்கும் துடுக்கும், மிடுக்கும், புத்திசாதுரியமும் மிக்கவர்.

விவசாய பீடம்

அவர் தம் பணிக்கு அணி செய்வது போல 1997 ல் கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்த விவசாய பீடம் காலத்தின் கோலத்தால் கலங்கிச் சிதைந்தது.

அந்த வேளை மாணவர்களை அன்போடு அரவணைத்து ஆறுதலளித்த சடையப்ப வள்ளல், விவசாயத்துறையின் சீர்மையை உணர்ந்து உயிர் கொடுத்த உத்தமர்.

யாழ்ப்பாணத்திலே உரிய இடவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முனைந்தார் எண்ணிய எண்ணியாங்கு எய்துவதற்குத் திண்ணிய நெஞ்சம் வேண்டும். தெளிந்த நல் அறிவோடு தக்க செயற்பாடுகளைச் செய்து காட்டிய பெருந்தகை.

புதுப்பொலிவோடு விவசாய பீடம் திருநெல்வேலியில் இயங்குவதற்கு ஆக்க பூர்வமான செயற்பாடுகளைச் செய்து முடித்தார். புதிய நூலகம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்தார். வாசிப்பதாற் பூரணத்துவமடைய வாய்ப்பு உண்டானது.

குறிப்பறிந்துசெயலாற்றல்

தூர இடங்களில் இருந்து வரும் மாணவர்கள் தங்கியிருந்து கற்க தக்க விடுதி வசதி ஏற்படுத்திக் கொடுத்தார். காலத்தின் தேவையாக அச் செயற்பாடு அமைந்தது, போற்றுதற்குரியது. யுத்தச் சூழ்நிலையில் மாணவர்கள் சித்தம் தடுமாறாமல் தமது கல்வியை அமைதியாக எடுத்துச் செல்ல வாய்ப்பளித்தார்.

உடுக்கை இழந்தவன் கை போல இடுக்கண் களைந்த வேந்தர் போற்றுதற்குரியவரே.

சிறந்த கல்வியியளாளருக்கான சிந்தனைத் தெளிவும், பரந்தயோசனையும்கொண்டு செயற்பட்டார். சொல்லும்செயலும் ஒருங்கே நிகழவைத்வ நேர்மையாளன், குறிப்பறித்து செயலாற்றும் கீர்த்தியுடைய குணக் குன்று,

விளையாட்டுத் திடல் அமைப்பு

உடலும்உள்ளமும் இரண்டு தான்அவைஒன்றாய் வலிமை பெற விளையாட்டு இன்றியமையாதது. சுவரைவைத்துக் கொண்டே சித்திரம் வரையலாம். எனவே தான் மாணவர்கள் விளையாடுவதற்கும், மன ஆறுதல் அடைவதற்கும் விளையாட்டுத் திடல் ஒன்றை உண்டாக்கினார். தூர நோக்கினர். பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கும், விஸ்தரிப்புக்கும் மனங் கொண்டு செயலாற்றிய பெருந்தகை, அவரின் ஆக்க பூர்வமான பெருமுயற்சியின் பேறாக விளையாட்டு மைதானம் மிளிர்கிறது.

செ அலெக்சாண்டர்
மருத்துவத்துறை
போதனா வைத்தியசாலை

நாட்டுக்குகந்த, மாணவர் பயனடையக் கூடிய துறைகள் சிலவற்றைச் சிந்தித்து உருவாக்கியவர். பல்கலைக் கழகம் இரும்புத் திரையால் மூடி மறைக்கப்படாது மக்கள் மயமாக்கப் பாடுபட்டார். அந்தப் பயன் பாட்டின் வெளிப்பாடே உடற்கல்வித் துறை.

(2ஆம் பக்கம் பார்க்க)

## தீர்த்தம் சாந்திக் கிரியை

(யாழ்ப்பாணம்)

மகாசிவராத்திரியை முன்னிட்டு வில்லூன்றி புனித தீர்த்தம் நேற்று முன்தினம் இறைத்து சுத்தமாக்கிச் சாந்திக் கிரியைகள் செய்யப்பட்டன. (எ)

## 5 ஆயிரம் அபராதம்

(மந்திகை)

சட்டவிரோத மின்சாரம் பெற்ற ஆறு பேருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் தலா 5ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

பருத்தித்துறை, ஓடைக்கரை, துப்பளை, புலோலி பகுதிகளில்சட்டவிரோத மின்சாரம் பெறப்படுவதாக மின்சாரசபை ஊழியர்களுக்கு கிடைத்த தகவலையடுத்து நடத்திய திடீர் சோதனையில் மேற்படி 6 பேரும் அகப்பட்டனர். (உ-23)

## சந்தேக நபர் கைதானார்

(கொழும்பு)

உதவிச் சுங்க அத்தியட்சகர் சுஜித் பிரசன்னாவின் படுகொலை தொடர்பாக தேடப்பட்டுவந்த பிரதான சந்தேக நபரான உதவிச்சுங்க அத்தியட்சகர் அனுர வீரசிங்க நேற்று அதிகாலை பொரளை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்தவருட மார்ச் மாதம் சுஜித் கொலை செய்யப்பட்டிருந்தார். இதனை அடுத்து அனுர வீரசிங்க இந்தியாவுக்குத் தப்பிச் சென்றதாகவும் பின்னர் மூன்றுமாதங்களுக்கு முன்னரே மீண்டும் இலங்கைக்குத் திரும்பியதாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ-5)

## விபத்தில் படுகாயம்

(மந்திகை)

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்ததில், அதில் பயணம் செய்தவர் தூக்கிவீசப்பட்டு படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழனன்று சூடத்தனைப் பகுதியில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில், புலோலி தெற்கைச் சேர்ந்த குகதாஸ் முகுந்தன் (வயது 23) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்தவராவார்.

விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிள் முற்றாகச் சேதமடைந்துள்ளது. (உ-23)

## முன்பள்ளி மூலவள பயிற்சி நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் நிறுவனம் மற்றும் உள்ளூராட்சி திணைக்களம் ஆகியன, யாழ். வலயக் கல்வித் திணைக்கள ஆளணி உதவியுடன் நடத்தும் முத்திரைச் சந்திக்கு அண்மையில் அமைக்கப்பட்ட முன்பள்ளி மூலவள பயிற்சி நிலையத் திறப்பு விழாவும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வதிவிடப் பயிற்சி ஆரம்ப விழாவும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி. ரி. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-19)

## சைக்கிள் திருட்டு

(நல்லூர்)

வண்ணை- சிவன்கோவிலடி கன்னாதிட்டி வீதிப் பகுதிகளில் அண்மைக்காலமாக சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-103)

## ஆசிரியரிடையே கட்டுரைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் ஆசிரியர்களுக்கு புதிய கல்விச் சீர்திருத்தம் பற்றிய கட்டுரைப் போட்டியினை, மத்திய கல்வி அமைச்சின் மனிதவலு அபிவிருத்திப்பிரிவு நடத்தவுள்ளது.

போட்டிக்கானகட்டுரைகள் இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்றும் இது குறித்த மேலதிக விபரங்களை வலயக்கல்விப் பணிமனையின் அபிவிருத்திப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் அறிவித்துள்ளார். (எ-19)

## 51ஆவது அகவைவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் க. தேவராசாவின் 51 ஆவது அகவை விழா இன்று மாலை 3.00 மணிக்கு இணுவில் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

தேவா பொன்விழாச் சபையினர் ஏற்பாடு செய்துள்ள இவ்விழாவிற்கு யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் அ. பஞ்சலிங்கம் தலைமை வகிப்பார்.

அருட்கவி சீ. விநாசித்தம்பி ஆசியுரையினையும், மஹா வித்துவான் ந. வீரமணிஐயர், இணுவில் இந்துக்கல்லூரி அதிபர் எஸ். குபேரநாதன், இணுவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் ந. ஸ்ரீமான் ஆகியோர் வாழ்த்துரைகளையும் வழங்கவுள்ளனர். (எ49)

## ஐ. தே. கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் கைக்குண்டு வீச்சு

(கொழும்பு)

ஹொகுவெல சரணங்க மைதானத்தில் நேற்று முன் தினம் இரவு 8.30 மணியளவில் நடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் இடம்பெற்ற கைக்குண்டு வீச்சில், ஒரு பெண் உட்பட 4 பேர் பலியானதுடன், 27 பேர்படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்கள் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களே சில தனிப்பட்ட விரோதங்களுக்காக இதனைச் செய்திருக்கலாம் எனவும்,

இது விடயத்தில் அரசியல் கலப்பு எதுவும் இல்லை என்பதையும் பொலிஸார் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர். (உ-8)

## கஞ்சா விற்ற பெண் பிணையில் செல்லஅனுமதி

(மந்திகை)

கொடிகாமம் பகுதியில் கஞ்சா விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில், கைது செய்யப்பட்டுதடுத்துவைக்கப்பட்ட குடும்பப் பெண்ணை பிணையில் செல்வதற்கு சாவகச்சேரி நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த வாரம் கொடிகாமம் பகுதியில் வைத்து கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பெண் கடந்த வியாழக்கிழமை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது,

இவரை 5ஆயிரம் ரூபா சரீரப்பிணையிலும் 10ஆயிரம் ரூபா பெறுமதியான இருஆள் பிணையிலும் 10ஆயிரம் ரூபா நன்னடத்தை கட்டளை முறி செலுத்தி பிணையில் செல்லவும் நீதிவான் அன்னலிங்கம் பிறேம் சங்கர் அனுமதியளித்தார். (உ-5-23)

## சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வியாவில் பூரணை பொற்கலை சமேத ஐயர் ஆலயத்தில் சிவராத்திரி விழா நாளை மறுதினம்நடைபெறவுள்ளது.

இரவு நான்கு சாம பூஜைகள் இடம்பெற்று, மறுநாள காலை 6. 00 மணிக்கு தீர்த்தக்கரைக்கு எம்பெருமான் எழுந்தருளவுள்ளார்.

இவ் விழாவில் பக்தர்கள் பங்கேற்க விசேட பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது .(உ-3)

## வவுனியாவில் ஈழநாதம்

(வவுனியா)

தமிழீழவிடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து வெளிவரும் ஈழநாதம் பத்திரிகை நேற்று முன்தினம் முதல் வவுனியாவுக்கு வரத் தொடங்கியுள்ளது.

அரசுக்கும் தமிழீழவிடுதலைப்புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டபின்ஈழநாதம் பத்திரிகை நேற்று முன்தினம் முதல் வவுனியாவுக்கு வரத் தொடங்கியுள்ளதாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

# செய்தித் துளிகள்

### ஆண்டு விழாவும் சிவராத்திரி விழாவும்

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் 48 வது ஆண்டு விழாவும் சிவராத்திரி விழாவும் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை பி.ப. 3.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இ.விஜ ரத்தினம் தலைமையில் இடம் பெறும் இந் நிகழ்வில் வரவேற்புரையை சைவப்புலவர் வ.கந்தசாமியும், ஆசியுரையை பிரம்ம ஸ்ரீ பா. முரளிதரக்குருக்களும் நிகழ்த்தவுள்ளனர்.

'சைவநெறி' என்ற விடயம் பற்றி யாழ்.வலயக் கல்வித் திணைக்கள சைவநெறிஆசிரிய ஆலோசகர்திருமதிச.பாலசிங்கம் சொற்பொழிவாற்றுவார்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யா.ஆனைப்பந்தி மெதடிஸ்தமிசன் அதிபர் சி. சோமேஸ்வரப்பிள்ளைகலந்து கொள்வார். (உ)

### நிர்வாகசபை தெரிவு

(ஊர்காவற்றுறை)

வேலணைத்துறையூர் ஐயனார் சனசமூக நிலைய புதிய நிர்வாகசபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றபோது, தலைவராக க. கந்தவனம், செயலாளராக ப. வடிவேலு, பொருளாளராக இ. தேவநேசன் ஆகியோரும் ஒன்பது நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (உ-75)

### திருட்டு ஆசாமி மடக்கிப் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

பல திருட்டுச் செயல்களில் ஈடுபட்டு வந்த நபரொருவர் நேற்று முன்தினம காலை சிறை காவலரால் வசமாக மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

நடராஜா ரஞ்சித்காந்த் என்ற நபரே கோவில் வீதியும் பிரதான வீதியும்இணையும் சந்தியில் சிறைக்காவலரால் பிடிக்கப்பட்டார்.

பிரஸ்தாப நபரை கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துமாறு யாழ்.மாவட்ட நீதிவான் இ. த. விக்கினராஜா பொலிஸாருக்கு கடந்தமாதம் 13 ஆம் திகதி உத்தர விட்ட போதும்,இவ்வளவுநாட்களும் இவர்பொலிஸாருக்கு டிமிக்கி கொடுத்து வந்தார்.

பல குற்றச் செயல்களுக்காக இவர் முன்னர் யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவரென்பது இங்குகுறிப்பிடத்தக்கது. (உ-19-4)

### பச்சை விறகு எடுத்துவரத் தடை

(கொக்குவில்)

காரைநகரில்இருந்து பொன்னாலைப் பாலம ஊடாக பச்சை விறகு அல்லது மரங்களை யாழ்ப்பாணம் எடுத்துவர கடற்படையினர் தடை விதித்துள்ளனர்.

முறையான அனுமதிப் பத்திரம் இன்றி இவ்வாறு விறகு எடுத்து வந்த சைக்கிள் விறகு வியாபாரிகள் பலரும் தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பியனுப்பப்படுகின்றனர்.

பச்சைமரங்கள் பலவும் விறகுக்காகக் கண்டபாட்டில் தறிக்கப்படுவதாக அப்பகுதிப் பொதுமக்கள் செய்த முறைப்பாட்டையடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (உ-243)

### அகண்ட நாம பஜனை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சிவன் கோவிலில் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை சிவராத்திரி தினத்தன்று காலை 5.00 - மாலை 5.00 மணிவரை ''தேசத்தில் தெய்வ ஆசிநிலவ'' வேண்டி சைவத்தமிழ் இளைஞர்களால் அகண்ட நாம பஜனை ஆன்மீக வழிபாடு நடத்தப்படவுள்ளது.

இதனைத்தொடர்ந்துசைவத் தமிழ்இளைஞர்கள் வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்திற்கு பஜனை யாத்திரை மேற்கொள்ளவுள்ளனர். (செ)

### நாளை முதல் புதிய நடைமுறை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் நாளைமுதல் ஆறு தடவைகள் விமானசேவை இடம் பெறவுள்ளது.

இச்சேவை அதிகரிப்புக்கு ஏற்றவகையில் உள்ளூர் விமான சேவைக்குப் பொறுப்பான 'ஹெலிரூர்ஸ்' நிறுவனம் புதிதாக ஒரு விமானமொன்றைக் கொள்வனவு செய்துள்ளது.

இதேவேளை, அரசு - புலிகளின் நிரந்தரப் போர் நிறுத்தத்தாலும் பயணத்துக்கான பாதுகாப்பு அனுமதி பெறும் முறை நீக்கப்பட்டிருப்பதாலும், பயணிகள் அதிகளவில் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் பயணம் செய்வதாலேயே விமானசேவை அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ)

### விளையாட்டு விழா

(கோப்பாய்)

உரும்பிராய் றோ. க. த. க. பாடசாலையின் தடகள விளையாட்டு விழா நாளை பி.ப 2.00 மணிக்கு அதிபர் மு. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், தென்மராட்சி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ். சிறிஸ்கந்தராஜா, புனித மைக்கல் தேவாலய பங்குத்தந்தை அருட்திரு. யே. அன்ரனிபாலா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-79)

### செய்முறைப் பரீட்சை

(நவக்கிரி)

வலிகிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட முதலாம் கட்ட அபிவிருத்தித் தொண்டர்களுக்கான செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கொங்கிறீற்கல்அமைத்தல், அலுவலக வீட்டு மின் உபகரணம் திருத்தல், விவசாய உபகரணம் திருத்தல், இரும்பு உருக்குதல் ஆகிய கற்கை நெறிகளை மேற்கொண்ட மாணவர்களுக்கே அன்றைய தினம் செய்முறைப் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன.

பழம் பதனிடல் பயிற்சி நெறி மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-233)

## பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை குறித்து மிகைப்படுத்திய தகவல்?

(கொழும்பு)

ஜேர்மன் ஒத்துழைப்பு மன்றத்தின் அனுசரணையுடன் புனர்வாழ்வு மீள் குடியமர்வு அகதிகள் விவகார அமைச்சு வெளிநாட்டு பிளாஸ்ரிக் அறுவைச் சிகிச்சை நிபுணர்களைக் கொண்டு, கடந்த மாதம் யாழ். போதனாவைத்திய சாலையில் நடத்திய பிளாஸ்ரிக்அறுவைச் சிகிச்சை மற்றும் கண் சிகிச்சை முகாம்களில்,

ஆயிரம் பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், 735 பேருக்கு பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ் வைத்தியமுகாம் தொடர்பாக விளக்கும்ஊடகவியலாளர் மாநாடொன்று புனர்வாழ்வு அமைச்சின்கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோதுஅமைச்சர் ஜயலத் இத் தகவலை வெளியிட்டார்.

அவர் இது தொடர்பாக தொடர்ந்தும் ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றுகையில்;

கொழும்பு தேசிய வைத்தியசாலை, காலி போதனாவைத்தியசாலை, பேராதனை வைத்தியசாலை என்பவற்றில் மட்டுமே பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைப் பிரிவு இருக்கிறது. எனவே யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணத்திற்கு வெளிநாட்டு வைத்தியர் குழுவைக் கொண்டு நாம் வைத்திய முகாம் நடத்தினோம். வடக்கு - கிழக்கில் இந்தச் சிகிச்சையைப் பெறுவது மிகவும் கடினமானது.

இருந்த போதும், அங்கு முகாமை நடத்த ஜேர்மன் ஒத்துழைப்பு மன்றம் முன் வந்தது, ஜேர்மன், சிம்பாவே, இங்கிலாந்து நாடுகளின் நிபுணர்கள் இந்த சிகிச்சைகளை நடத்தி வைத்தார்கள். ஒரு கோடி 50 இலட்சம் செலவில் நடத்தப்பட்ட இந்த முகாம் பூரணம் மிக்கதாக அமைந்தது என்று தெரிவித்தார்.

இம் மாநாட்டில் யாழ். அரச அதிபர் சண்முகநாதன், ஜேர்மன் ஒத்துழைப்பு மன்றத் தலைவர், செயலாளர், பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இது இவ்வாறிருக்க, சுமார் 500 பேர் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள பதிவுகளை மேற்கொண்டதாகவும், 160 வரையானோருக்கே சத்திர சிகிச்சைகள் இடம்பெற்றதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் முன்னர் தகவல் வெளியிட்டிருந்தபோதிலும்,

இவ்வாறு உண்மைக்குப் புறம்பான வகையில் அமைச்சர் கூறியிருப்பது குறித்து பொதுமக்கள் வியப்பு வெளியிட்டுள்ளனர். (உ)

### வலி.கிழக்குபிரதேசசெயலக நடமாடும் சேவை

(நவக்கிரி)

அரசின் நூறுநாள் வேலைத் திட்டத்தின் கீழ், கோப்பாய் பிரதேச செயலக நடமாடும் சேவை எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அச்சுவேலி பிரதேசசபை உப அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இதில், நிவாரணமுத்திரை, பொதுசன மாதாந்த உதவிப் பணம், கிராம அபிவிருத்தி, சொத்திழப்பிற்கான நட்டஈடு, புனர்வாழ்வுக் கடன், வாகன அனுமதிப்பத்திரம் போன்ற விடயங்களும் பரிசீலிக்கப்பட்டு பரிகாரம் காணப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-233)

### யாழ்.ஆஸ்பத்திரி விடுதிகளைப் பராமரிக்க வர்த்தகர்கள் உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில், விடுதிகள் சிலவற்றை யாழ்.வர்த்தகர்களின் நிதியுதவிடன் பராமரித்து வரும் 'பிரத்தியேக சுகாதாரப் பொறியியல் சேவை' அமைப்பினர் தமது சேவையை மேலும் விரிவுபடுத்தி பிரசவ விடுதியையும் பராமரிப்புச் செய்ய ஒத்துழைப்பு நல்குமாறு வர்த்தகர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேற்படி அமைப்பின் முயற்சியால் வர்த்தக நிறுவன உரிமையாளர்கள் இணைந்து யாழ்.போதனா வைத்திய சாலை சத்திரசிகிச்சை விடுதிகளைப் பராமரிக்க உதவி புரிந்து வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

### உலக வங்கி உதவியுடன் ஆறுகள் திசை திருப்பல்

(வவுனியா)

உலக வங்கியின் நிதி உதவியுடன் வடகிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்படும் நியாப் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்திலுள்ள ஆறுகளை குளங்களுக்கு திசை திருப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வன்னி புனர்வாழ்வு அமைச்சர் நூர்டீன் மஷூர் தெரிவித்துள்ளார்.

இதன்படி மல்வத்து ஓயா ராமையன் குளத்திற்கும், நறுவிலி ஆறு சிப்பிக் குளத்திற்கும் திசை திருப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

மேற்படி ஆறுகள் திசை திருப்பப்படுவதால் குறித்த சில பிரதேசங்களுக்கு நீர் கிடைக்கமாட்டாது என்று விவசாயிகள் அச்சமடையத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இரு போகங்கள் நெற் செய்கை மேற்கொள்ள இந்த நடவடிக்கை பயனளிக்கு மென்று முன்பு விவசாயிகள கோரிக்கை விடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

### தொழில் முயற்சியாளர் சங்கம் அங்குரார்ப்பணம்

(மந்திகை)

வடமராட்சிப் பிரதேச சுய தொழில் முயற்சியாளர்கள் ஒன்றிணைந்து தொழில் முயற்சியாளர் சங்கம் ஒன்றினை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துள்ளனர்.

சுயதொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்களின் திறனை விருத்தி செய்தல் சுயதொழில் முயற்சிக்கான பயிற்சியைப் பெற்றவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துதல் போன்ற நோக்கங்களுடன் இவ்வமைப்பு உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச் சங்கத்தின் தலைவராக எஸ். ஸ்ரெனிஸ்லாஸ், செயலாளராக எஸ். எல்வதி, பொருளாளராக எஸ்.மனோகரதாஸ் ஆகியோர் உட்பட 11 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (உ-23)

### தேர்தலைக் கண்காணிக்க வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தேவை என்கிறது பொ. ஐ. மு.

இம்மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை கண்காணிப்பதற்காக பிரதிநிதிகளை அனுப்பிவைக்குமாறு உள்ளூர் அமைப்புகளையும், சர்வதேச அமைப்புகளையும் பொதுஜன ஐக்கிய முன்னணி கேட்டுள்ளது.

பொதுநலவாய நாடுகளின் தலைமையகம்சார்அமைப்பு ஐ. நா. ஆணைக்குழு ஆகியவற்றிடமே இது தொடர்பாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வாக்கு மோசடிகள் எதுவுமற்ற, சுதந்திரமானதான தேர்தலை நடத்துவதுதெனின் இத்தகையகண்காணிப்புக்கள் அவசியம் என பொதுஜன ஐக்கியமுன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம். ஜெரத்னாஇதுகுறித்துகருத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தராஜ பக்ஷ மாவட்டரீதியிலான கண்காணிப்புக்களை ஏற்படுத்துமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், அரசாங்க மருத்துவஅதிகாரிகள் சங்கம், தொழிற்சங்க பிரதிநிதிகள் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-8)

### இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம்-பறாளாய் அருள் மிகுஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி ஆலய ஷண்முகப் பெருமானின் இலட்சார்ச்சனை எதிர்வரும்15ஆம்திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து ஆறு நாட்கள் நடைபெறவுள்ளது. (செ)

### பாலம் சேதம்

(அராலி)

வட்டுக்கோட்டை- மூளாய் வீதியில் உள்ள பாலம் சேதமடைந்த நிலையில் உள்ளதால் வாகனங்களில் செல்பவர்களும் பாதசாரிகளும் பெரும் சிரமப்படுகின்றனர். (உ-214)

## இன்று ஒரு தகவல்

# மருந்தாகும் சீந்தில்

அமிர்தம் எப்படி நரை, திரை, மூப்பு, சாக்காடு இன்றி வாழ்வதற்கு வகை செய்கின்றதோ அதைப்போல சீந்திலும் நமக்குப் பல நன்மைகள் அளிப்பதால் அதற்கு அமிர்தவல்லி எனப் பெயர் வந்தது. மேலும் சீந்திற் கொடி பெரிய மரங்களைச் சுற்றிச் சுற்றி உச்சிவரை சென்று துளிர்க்கும். சில சமயங்களில் கொடியை அறுத்துவிட்டால் கூட பல நாட்கள் இலைகள் வாடாமல் பசுமையாக இருப்பதால் இதற்குச் சாகா மூலிகை என்று பெயர் வந்துள்ளது போலும்.

சீந்தில் கொடி வகையைச் சேர்ந்தது சீந்தில், பொற்சீந்தில், பேய்ச்சீந்தில் என இதில் மூன்று வகை உண்டு. குறிப்பாக மலையடிவாரங்களில் இது அதிகமாக வளருகின்றது. சீந்தில் உடலிலுள்ள வெப்பத்தைஅகற்றி ஆண்மையைப் பெருக்குகிறது. பசியைத் தூண்டக்கூடிய குணம் உடையது. சீந்தில் முழு மூலிகையும் உடலைத் தேற்றி உடலுக்கு வன்மையை அளிக்கிறது. இதன் இலை, கொடி, வேர் முதலிய பாகங்கள் மருந்தாகப் பயன்படுகின்றன. சீந்திலின் தண்டு, இலைகள், வேர் அனைத்தும் மருத்துவப் பயன் உள்ளது. அவைகளைப் பச்சையாகப் பறித்த உடன் மருந்தாகப் பயன்படுத்தினால் முழுப்பயனும் கிடைக்கும்.

எளிதில் ஆறாத புண்களின் மேல் சீந்தில் இலையை சிறிது ஆமணக்கு எண்ணெய் விட்டு அனலில் வாட்டிக் கட்டி வந்தால் புண்கள் விரைவில் ஆறும். சீந்தில் வேருடன் பற்படாகம், சந்தனம், சுக்கு, வெட்டிவேர், விலாமிச்சை வேர், சிற்றாமுட்டி, கோரைக்கிழங்கு ஒவ்வொன்றையும் 35 கிராம் வீதம் சம எடையாக எடுத்து முறைப்படி குடிநீரிட்டு மூன்று வேளையாக அருந்திவர பித்தத்தினால் உண்டான சுரம் நீங்கும். கடுக்காய், சிவதை வேர், கடுகுரோகினி, கற்றாழைச் சருகு, களிப்பாக்கு, சுக்கு, சீந்தில் தண்டு இவைகளைச் சம அளவாக எடுத்துக் கொண்டு தேவையான அளவு தண்ணீர் சேர்த்து எட்டில் ஒன்றாகக் காய்ச்சி அருந்திவர மாந்தத்தினால் ஏற்பட்ட சுரம் குணமாகும்.

சீந்தில் கொடியை மருந்தாகப் பயன்படுத்தும் போது நன்கு முற்றிய கொடியினைக் கோடை காலத்தில் சேகரித்து வைத்துக்கொண்டு பயன்படுத்தினால் நல்ல பலன் தரும், முற்றிய சீந்தில் கொடியைச் சிதைத்து 34 கிராம் எடுத்துக் கொள்ளவேண்டும். கொத்தமல்லி 4 கிராம், சோம்பு ½ கிராம், அதிமதுரம் 4 கிராம், பன்னீர் பூ ½ கிராம் என ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொண்டு, தேவையான அளவு வெந்நீர் விட்டு ஒரு மணி நேரம் ஊறவைக்கவேண்டும். பின்பு இதனை வடிகட்டி 25 மி. லீ. வீதம் மூன்று வேளையாக அருந்திவர, உண்ட உணவு செரியாமல்வயிறு உப்புசமாக இருப்பது, முறைசுரம், வயிற்றுக் கோளாறு முதலியவை நீங்கும், நீரிழிவு நோயாளிகள் சீந்தில் இலையைப் பறித்து வந்து தினம் காலை வெறும் வயிற்றில் அதை அரைத்து எலுமிச்சங்காய் அளவு அறுபது நாட்கள் சாப்பிட்டுவர நீரிழிவு நோய் கட்டுப்படும். இதற்குக் கோடை காலத்தில் கிடைக்கும் சீந்தில் இலையே சிறந்தது.

சீந்தில் கொடியிலிருந்து தயாரிக்கப்படும் சீந்தில் சர்க்கரை தொழுநோய், தோல் நோய்கள், கபத்தினால் ஏற்படும் இளைப்பு, சுவாசகாசம் முதலிய நோய்களுக்கு சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது. நீரிழிவு நோய் உடையவர்களுக்கு தாகம் அதிகமாக ஏற்படும். சீந்தில் சர்க்கரையை ஒரு கிராம் உண்டுவர தாகம் நீங்கும், சீந்தில் சர்க்கரை நல்ல சத்துப் பொருளாகக் கருதப்படுகிறது. இதுஉடலில் தோன்றும் எரிச்சல் மற்றும் செரியாமை, குளிர்சுரம், சிறுநீர் தாரையில் ஏற்படும் தொற்றுகளுக்கு 7.5மி. கிராம் முதல் 15 மி. கி. வரை கொடுக்கலாம்.

சீந்தில் லேகியமானது இதயத்தை வலிமைப்படுத்துவதற்கும் உடலுக்கு ஊட்டத்தைத் தருவதற்கும், ஆண்மையைப் பெருக்கி விந்து அணுக்களை உற்பத்தி செய்வதற்கும் பயன்படுத்தப்படுகிறது. சீந்திலை முதலாகக் கொண்டு சீந்தில் எண்ணெய், சீந்தில்நெய், சீந்தில்லேகியம், சீந்தில் பொடி, சீந்தில் சர்க்கரை முதலிய மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. சீந்தில் ஒரு நல்ல உடல்தேற்றியாக மட்டுமல்ல, தேக ஆரோக்கியத்துடன் நீண்ட ஆயுளையும் தரவல்ல கற்பக மூலிகையாகவும் பயன்படுகிறது.

டாக்டர் இரா. கண்ணன்

# கண்ணிவெடிகளை அகற்றக் கோரிக்கை

(மந்திகை)

நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் வீரகத்தி விநாயகர் ஆலயப் பகுதியிலுள்ள மிதிவெடிகள், கண்ணிவெடிகளை அகற்றுமாறு ஆலய பரிபாலன சபையினர் தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள 521 வது படைப்பிரிவுத் தளபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்ற இவ்வேளையில் அப்பகுதி ஆலயங்கள், சந்தைகள் மற்றும் பொது இடங்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

# விடுதிப் பொறுப்பாளர் கத்தியால் குத்திக்கொலை

(கொழும்பு)

கொழும்பு கொட்டாஞ்சேனை விவேகானந்தா வீதியில் உள்ள விடுதியொன்றின் பொறுப்பாளர் இனந்தெரியாதோரால் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டுள்ளார்.

ஆசையா பாலசுப்பிரமணியம் சீமன் ராஜா (வயது 56) என்பவரே இவ்வாறு குத்திக் கொல்லப்பட்டவராவார்.

இவரது சடலத்திற்கருகில் இரண்டு கைத்தொலைபேசிகளும் ஒரு பாதணியும் காணப்பட்டது எனவும் பொலிஸார்தெரிவித்துள்ளனர். (செ)

# தேசத்தை நேசிக்கும் எவரும் சமாதான உடன்படிக்கையை ஏற்பர்

## ஆயர் சங்கத் தலைவர் கருத்து

(கொழும்பு)

'தமிழீழவிடுதலைப்புலிகளும் இலங்கை அரசாங்கமும் செய்து கொண்ட உடன்படிக்கையை தேசத்தை நேசிக்கும் எவரும் நிராகரிக்கமுடியாது' இவ்வாறு இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இச்சங்கத்தின் தலைவரான அதிவண. ஒஸ்வேல்ட் ஹோமிஸ் ஆண்டகை இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் நாட்டில் இன மத சமூகங்களுக்கிடையில் அவ நம்பிக்கையை ஏற்படுத்தி குழப்ப நிலையை ஏற்படுத்துவதற்கு சிலர் முயற்சிக்கின்றமை தனக்கு கவலை அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்,

ஸ்கண்டிநேவிய நாடுகளில் அதிகமானோர் கிறிஸ்தவர்களாகஇருப்பதனால்சமாதான முயற்சிகளும் திருச்சபையோடு தொடர்புடையவை என்று கூறப்படுவதை நிராகரித்துள்ளார்.

சகலரும் இன, மத பேதமின்றி இணைய வேண்டிய தருணம் வந்துள்ளது. பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண்பதற்கு இதுவே கடைசிச் சந்தர்ப்பம் என்றும் அவர் மேலும்குறிப்பிட்டுள்ளார். (செ)

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கச்சேரி-நல்லூர் வீதி பாணன்குளம் நாச்சியம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும்16ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள்நடைபெறவுள்ளன.

16ஆம் திகதி கொடியேற்றமும், 27ஆம் திகதி வேணு கோபாலர் உற்சவமும், 28 ஆம்திகதி சப்பரம், சற்பூரச் சட்டி, திருவிளக்குப் பூஜையும் 29ஆம்திகதி இரதோற்சவமும், 30ஆம் திகதி தீர்த்தோற்சவமும், 31ஆம் திகதி பூங்காவனமும், ஏப்ரல் 1ஆம் திகதிவைரவர் உற்சவமும், 2ஆம்திகதி அன்னதானமும் நடைபெறவுள்ளன. (செ)

## குடும்பப் பெண் மரணம்

(மந்திகை)

எரிகாயங்களுடன் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பப்பெண், சிகிச்சை பலனளிக்காத நிலையில் 7 நாட்களின் பின்னர் கடந்த செவ்வாயன்று உயிரிழந்தார்.

கடந்த 26 ஆம் திகதி மண்ணெண்ணெய் என எண்ணி பெற்றோலை அடுப்பில் ஊற்றிய வேளை தீப்பிடித்ததில் படுகாயமடைந்த கரணவாய் கிழக்கைச் சேர்ந்த ஜெ. விக்கினேஸ்வரி (வயது 26) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். (உ-23)

## முன்பள்ளி மாணவர்களுக்கு சத்துணவு

(ஆனைக்கோட்டை)

காக்கைதீவு பிரதேசத்தில் அண்மையில் திறந்துவைக்கப்பட்ட முன்பள்ளியில் கற்கும் சிறார்களுக்கான சத்துணவை வழங்கவும், முன்பள்ளிஆசிரியருக்கானசம்பளத்தை வழங்கவும் மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திச் சபைமுன் வந்துள்ளது. (உ-201)

## கிளை மீளத்திறப்பு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பாசையூர் 23 ஆம் இலக்கக்கிளை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு முன்னால் திறக்கப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டுஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் பின் மூடப்பட்ட இக்கிளை மக்கள மீளக்குடியமர்ந்துள்ளதையடுத்தே மீண்டும்திறக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-223)

# உடன்படிக்கை பற்றி ஜனாதிபதி பிரதமருக்கு உத்தரவு இடவேண்டும்

## ஜே வி. பி.கடிதம்

(கொழும்பு)

நோர்வே அரசு, விடுதலைப் புலிகள், பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா ஆகியோர்செய்து கொண்டுள்ள உடன்படிக்கையில் உள்ள விடயங்களை நாட்டு மக்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும்தெரியப்படுத்த வேண்டும்.

ஜனாதிபதி தனக்குள்ள நிறைவேற்று அதிகாரங்களைப் பயன் படுத்தி பிரதமருக்கு இதற்கான உத்தரவினை இடவேண்டும்.

இவ்வாறு ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்காவிற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும் அக்கடிதத்தில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது! இந்த உடன்படிக்கை தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட்டு உடன்படிக்கையின் நகல்கள் பற்றி அதில் தெரிவிக்கும்படி நாம் பிரதமருக்கு பெப்ரவரி 27 ஆம் திகதி கடிதம் எழுதியிருந்தோம் பிரதமர் அவை பற்றி விவாதத்தில் தெரிவிக்கவில்லை. எனவே இலங்கை அரசிடம் இந்த உடன்படிக்கையின் விபரங்கள் இல்லை என்றும் நகல்கள் இருந்தும் மறைக்கப்பட்டன என்றும் எண்ணவேண்டியுள்ளது.

இந்த உடன்படிக்கையால் நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும் இறைமைக்கும், பாதுகாப்பிற்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. (எ)

# புதிய சந்தையை திறக்க இன்னும்அனுமதியில்லை

## பொது மக்கள் கவலை

(கொழும்பு)

திருகோணமலை மின்சார நிலைய வீதியில் கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்டபுதியபொருட் சந்தைக் கட்டடம் பொது மக்களின் தேவைக்காக திறந்து விடப்படாதது குறித்து திருமலை நகர வாசிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

சுமார் அறுபது லட்சம் ரூபா செலவில் இச் சந்தைக் கட்டடம் அமைக்கப்பட்ட போதும் இது வரையில்பொது மக்கள சந்தையைத் திறந்து வர்த்தகம் நடத்துவதற்கு அனுமதிக்கப்படவில்லை.

இச் சந்தைக் கட்டடம் தற்போது, கப்பல் மூலம் யாழ். குடாநாட்டிற்கு வருவோர் தங்கும் விடுதியாகப் பயன்படுத்தப்படுகின்றது.

பேருந்து நிலையச் சந்தையில் உள்ள வியாபாரிகள் தங்கள் வியாபாரம் பாதிக்கப்படும் என்பதால் இதனை இயங்க விடாது தடுத்து விடுகின்றனர் எனவும் பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இச் சந்தையை திறப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என ஏற்கனவே பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் செய்தமையும் குறிப்பிடத்தக்கது. (செ)

## கண்ணிவெடி விழிப்பு அப்பியாசக் கொப்பிகள்

(கொக்குவில்)

ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தின, கண்ணிவெடி விழிப்புணர்வுப் பிரிவு, மாணவர் மத்தியில் கண்ணிவெடி மற்றும் வெடிப்பொருட்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

அந்த வகையில், கண்ணிவெடி விழிப்புணர்வுப் படங்கள், வாசகங்களைத் தாங்கிய அட்டைப்படம்கொண்ட அப்பியாசக் கொப்பிகள் அண்மையில் தீவகப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன. (உ-243)

## சிந்தனைக்கு விருந்து

### ஊர் செல்வது எப்போது?

பலபரப்பு வயல் தோட்டம் பனங்காணி தோப்பென்று
பலவும் பெற்று
நிலப்பிரபு வாயிருந்த கந்தப்பர் இன்றவற்றை
ஊரில் விட்டுப்
புலம் பெயர்ந்து சிறுகுடிலில் மனைமக்க ளோடுநிவா
ரணத்தைப் பெற்றுத்
தலைகுனிந்து நெடுமூச்சில் தளர்கின்றார் தம்மூருக்
கென்று செல்வார்?

-பழையவன்

# அல்கெய்டாக்களின் ஆவேசத் தாக்குதலுக்கு அமெரிக்க படைகள் தாக்குப் பிடிக்குமா?

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியில் அல்கெய்டா போராளிகளுக்கும் அமெரிக்கப் படையினருக்குமிடையில் இடம்பெற்று வரும் கடும் மோதல்களை அடுத்து, அங்கு அவசர அவசரமாக ஆப்கான் இராணுவம் அனுப்பப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் மலைப் பகுதிகளில் அமெரிக்கப் படையினர், போரிடுவதற்கு திணறுவதாகவும் அப்பகுதிகளில் போரிடும் பரீட்சயமற்ற காரணத்தினால் 50 இற்கும் மேற்பட்ட டாங்கிகள் சகிதம் ஆப்கான் இராணுவம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுகிறது.

அல்கெய்டா போராளிகளை முற்றாக ஒழித்துக் கட்டும் வகையில் ஆயிரக்கணக்கான இராணுவத்தினரும் கனரக வாகனங்கள், பீரங்கிகள் என்பனவும் அனுப்பப்பட்டு வருவதாக ஆப்கான் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

வியட்நாம்போரில் சந்தித்த பாரிய நெருக்கடிக்குப் பின்னர் ஆப்கானிஸ்தானிலேயே அமெரிக்க படையினர் அது போன்றதொரு நெருக்கடியை எதிர்கொள்வதாக ஆப்கானிஸ்தானிலுள்ள பி. பி. சி. செய்தியாளர் விமர்சித்துள்ளார். (உ-5)

## ஜெயாவின் விசுவாசி நாக்கைத்துண்டித்தார்

(புதுடில்லி)

தமிழக முதலமைச்சர்செல்வி ஜெயலலிதாவின் தீவிர விசுவாசியாகிய அ.தி.மு.க தொண்டர் ஒருவர் தனது நாக்கை வெட்டியுள்ளார்.

இம் மூடத்தனமான செயல் சீர்காழியில் இடம் பெற்றுள்ளது.

# உலக தரிசனம்

## பேச்சை ஆரம்பிக்க அமெரிக்கா அழுத்தம்

(ஜெருசலேம்)

இஸ்ரேலும் பலஸ்தீனமும் உடனடியாக சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமென அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக,மத்திய கிழக்கிற்கான தூதுவர் அன்ரனி பினி அடுத்த மாதம் பேச்சுக்களை தொடங்கவுள்ளார்.

அதற்கிடையில் இவ்விரு நாடுகளும் தமக்குள் புரிந்துணர்வுப்பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என அமெரிக்கா கேட்டுள்ளது

இதேவேளை, பலஸ்தீனரைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்படும் இஸ்ரேல் உடனடியாக யுத்த நிறுத்தத்தைபிரகடனப்படுத்தி புதிய சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென பிரான்ஸ் கேட்டுள்ளது. (உ-7)

## சட்டவிரோதமாக இத்தாலி சென்ற படகு நீரில் மூழ்கியது 70 பேரைக் காணவில்லை

(ரோம்)

இத்தாலிக்கு சட்டவிரோத குடியேற்றவாசிகளை ஏற்றிச் சென்ற படகு ஒன்று சிசிலி தீவின் தென்பகுதியில் மூழ்கியதில் அதில் பயணம் செய்த 70 பேர் நீரில் மூழ்கி மரணமடைந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

படகில் சென்ற 11 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

மேற்படி படகு வட ஆபிரிக்காவில் இருந்து வந்ததாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

கடந்த 10 ஆண்டுகளில், இத்தாலிக்குள் சட்டவிரோதமாக நுழைய முயன்ற 27 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

## கைதான தீவிரவாதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்க பாகிஸ்தான் முடிவு

(இஸ்லாமாபாத்)

கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான தீவிரவாதிகள், வன்முறைகளைக் கைவிட்டு தடைசெய்யப்பட்ட அமைப்புக்களிலிருந்து விலகுவதான உறுதிமொழிகளில் கையெழுத்திட்டால் பொதுமன்னிப்பு வழங்க அரசாங்கம் தயாராகவுள்ளதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

இந்தியநாடாளுமன்றத்தின் மீதான தாக்குதலின் பின்னர் சர்வதேச ரீதியாக எழுந்த நெருக்கடிகளை அடுத்து நூற்றுக்கணக்கான தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டதுடன் இரண்டு தீவிரவாத அமைப்புக்களும்பாகிஸ்தானில் தடை செய்யப்பட்டன.

நாடாளுமன்றம் மீதான தாக்குதலுக்கு முன்னதாக கொலை மற்றும் வன்முறைகளில் ஈடுபட்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் உள்ள தீவிரவாதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படமாட்டாதெனவும் அறிவிக்கப்பட்டுளது.

இதேவேளை, பாகிஸ்தானின் இந்த நடவடிக்கையை இந்தியா வன்மையாக கண்டித்துள்ளதுடன் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையில் பாகிஸ்தான் மனப்பூர்வமாக செயற்படவில்லையெனவும் அது குற்றஞ்சாட்டியுள்ளது. பாகிஸ்தானில் 5 தீவிரவாத அமைப்புகள் தடைசெய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)

## உத்தரப் பிரதேசத்தில் மத்திய அரசின் நேரடி ஆட்சி

(புதுடில்லி)

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தை இந்திய மத்திய அரசின் நேரடி ஆட்சியின் கீழ் கொண்டு வருவதற்கு குடியரசுத் தலைவர் கே. ஆர். நாராயணன் அங்கீகாரம் அளித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில் உத்தரப் பிரதேச மாநிலத்தில் எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறாததை அடுத்து, இந்த விடயத்தில் மத்திய அரசு தலையிடவேண்டுமென ஆளுநர் கிருஷ்ணகாந்த் சாஸ்திரி குடியரசுத் தலைவரை கோரியிருந்தார்.

சட்டமன்றத்தேர்தலில்கூடுதல் ஆசனங்களைப் பெற்ற சமஜவாதிக் கட்சி மத்திய அரசின் ஆட்சி அமுல்ப்படுத்தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன் இந்த முடிவு அவசர அவசரமாக எடுக்கப்பட்டது என்றும் குறை கூறியுள்ளது.

இந்தியாவின் மக்கள் தொகை கூடிய மாநிலமாக உத்திரப் பிரதேச மாநிலம் விளங்குவது குறிப்பிடத்தக்கது. (உ-5)

## வளிமாசடைவதால் சுவாசப் புற்று ஏற்படும் ஆய்வு மூலம் கண்டறிவு

(வாஷிங்டன்)

வளிமண்டலம் மாசடைவதால் சுவாசப்பை புற்றுநோய் உட்பட பல வியாதிகள் ஏற்படுகின்றன என ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

வாகனங்கள், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் வாயுப்பதார்த்தங்களிலுள்ள நச்சு நுண்துகள்கள், பதார்த்தங்கள் சுவாசப்பை, இதயம் போன்ற உள் உறுப்புக்களின் செயற்பாடுகளுக்குப் பெரிதும் அச்சுறுத்தலாக இருக்கின்றது.

அத்துடன் நிமோனியா, ஆஸ்மா, மாரடைப்பு, புற்றுநோய் போன்ற நோய்களும் ஏற்படுகின்றன.

இதுபற்றி அமெரிக்காவில் கடந்த பதினாறு வருடங்களாக ஆயிரக்கணக்கானோரைப்பயன்படுத்தி நிறைவான முறையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. (செ)

## இந்தியா - பாகிஸ்தானிடையே மீண்டும் விமான சேவை இடம்பெறும் சாத்தியம்

(இஸ்லாமபாத்)

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நேரடியான விமானசேவைகளை மீண்டும்ஆரம்பிப்பதுதொடர்பாக இந்தியா தனது முடிவை பரிசீலித்தால், விமான சேவைகளை ஆரம்பிக்க முடியுமென பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில்நடைபெற்ற சார்க் நாடுகளைச் சேர்ந்த தகவல்துறை அமைச்சர்களுக்கான மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கு பாகிஸ்தான் சென்ற இந்திய தகவல்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜிடமே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதற்குப்பதிலளித்துப்பேசிய தகவல் துறை அமைச்சர் 'முஷாரப் ஒரு நாட்டின் அதிபர், நான் தகவல் துறை அமைச்சர் மட்டுமேஎன்னால் இதற்குப் பதில் சொல்ல முடியாது' என்று கூறினார்.

அரசியல் ஒற்றுமையின்மை நிலவும் போது ஒத்துழைப்பு என்பது சாத்தியமாகுமா? ஏனைய எல்லாத்துறைகளிலும் அர்த்தமுள்ளஒத்துழைப்புக்கு மையமாக விளங்குவது அரசியல் ஒற்றுமை தான்என பர்வேஷ் முஷாரப் மேலும் உறுதிபடக் கூறியுள்ளார். (உ-5)

## இஸ். இராணுவதாக்குதலில் 30 பலஸ்தீனர்கள் பலி

(டெல்அவிவ்)

தற்கொலைத் தாக்குதலில் 5 இஸ்ரேலிய மாணவர்கொல்லப்பட்டதை அடுத்து இஸ்ரேலிய இராணுவம் நடத்திய தாக்குதலில் 30 இற்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலுக்கு பதிலடியாகவே பலஸ்தீனர்கள மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

கடந்த 17 மாதங்களாக நடைபெற்றுவரும் வன்முறைகளில் இந்த தாக்குதல் மிகவும் மோசமானதென தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மேற்குக்கரை நகரானதுர்க்கராயில்இஸ்ரேலிய இராணுவம், இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்திருந்தது.

இந்தப் பகுதியில் தற்பொழுதும்மோதல்கள் இடம்பெற்றுவருவதாகவும் இதில் இஸ்ரேலிய சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இஸ்ரேலிய ஹெலிகள், பலஸ்தீன நகரங்கள் மீது தொடர்ந்தும் றொக்கட் தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றன.

இதேவேளை, தற்போது நடைபெற்றுவரும் தாக்குதல்களின் தீவிரத்தை அடுத்து மத்தியகிழக்கிற்கான அமெரிக்கத்தூதுவர் அவசர அவசரமாக அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். (உ-5)

## எல்லே போட்டி

(ஊர்காவற்றுறை)

வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்றுவரும் குழுப் போட்டிகளில் நாளை காலை 9.00 மணிக்கு வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக மைதானத்தில் எல்லே போட்டி இடம்பெறவுள்ளது. (உ-75)

## 167 வது ஜன்மதினம்

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் 167 வது ஜன்மதினம் எதிர் வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. (உ)

## கலாசார மண்டப அமைப்பு வேலை இடை நிறுத்தம்

(ஊர்காவற்றுறை)

வேலணை துறையூரில் அமைக்கப்படும் கலாசார மண்டப கட்டட வேலைகள் பூர்த்தியடையாத நிலையில் கடந்த 6 மாதகாலமாக காணப்படுகின்றது.

75 வீத திட்டம் முடிவுற்ற நிலையில் இது காணப்படுகிறது. (உ-75)

## விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு

(உரும்பிராய்)

இந்துவிவகார அமைச்சர் தி. மகேஸ்வரன் ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களை அண்மையில் காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா ம.ம. வித்தியாலயத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளார். (உ-243)

## கலந்துரையாடல்

(மந்திகை)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக முதலாம் கட்ட அபிவிருத்தித் தொண்டர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு மந்திகையிலுள்ள அபிவிருத்தித் தொண்டர்களின் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. (உ-23)

★ ★ ★

(மந்திகை)

யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் நடத்தப்படும் வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான மொழித்திறன் விருத்தி செயல்திட்டம், தொடர்பான கலந்துரையாடல், இன்று காலை 8.30 மணிக்கு நெல்லியடியிலுள்ள ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளதாகவலயக்கல்விப் பணிப்பாளர் வி. ரி. செல்வரட்ணம் அறிவித்துள்ளார். (உ-23)

★ ★ ★

(மந்திகை)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர்பிரிவிலுள்ள முதலாம் கட்ட அபிவிருத்தித் தொண்டர்களுக்கான கலந்துரையாடல் எதிர் வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை மு. ப. 10.00 மணிக்கு தும்பளையிலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. (உ-23)

எவ்வதுறைவது உலகம்உலகத்தோடு
அவ்வதுறைவது அறிவு
- குறள்

**வலம்புரி**

## நடிப்பு சுதேசிகள்

கொழும்பு பல்கலைக் கழக மாணவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை வீதிகளில் இறங்கி புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர். அப்பகுதியால் வந்த இனவாத மற்ற சிங்கள சமூக சேவையாளர் ஒருவர் ஆர்ப்பாட்டத்தைப் பார்த்துவிட்டு நீங்கள் ஒப்பந்தத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்கின்றீர்கள் எனவே நீங்கள் இராணுவத்தில் சேருங்கள் நான் இப்போது தொலைபேசி மூலம் இராணுவ ஆட்சேர்ப்புப் பொறுப்பதிகாரிக்குத் தகவல் கொடுத்திருக்கிறேன் அவா விரைந்து வந்து விடுவார் என்று கூறினார். அவ்வளவு தான் ஆர்ப்பாட்டக்காரர்கள் செத்தமாட்டில் இருந்து கழன்றது போல் அவ்விடத்திலிருந்து கலைந்துவிட்டனர். எப்படியிருக்கிறது நிலைமை.

தன்னில்பாதிப்புவராத வரை-தனது உடமைக்கு உயிருக்கு சேதம்இல்லாத வரை தேசம் காக்கும் உணர்வு சிங்கள தேசத்தில் சிறப்புப் பெற்றிருக்கிறது.

இந்நிலைமை- தென்னிலங்கையில் மட்டுமே என எண்ணிவிடக் கூடாது. நமது மண்ணிலும் தாராளம். தான் சௌகரியமாக வாழ்ந்து கொண்டு- தனது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு தேச விடுதலைபற்றிப் பேசுகின்றவர்கள் ஏராளம் - தாராளம்.

போர்க்களத்தில் போராடும் புலிவீரனுக்கு ஆறுதலாக - துனணயாக உதவி செய்வார் இல்லை, ஆனால் கந்தோர் மேசைகளில் கோவைகளை விரித்து வைத்துவிட்டு விடுதலைக் கோஷம் எழுப்புவோர் பலர்.

இவர்களும்தென்னிலங்கையில் கலைந்து போன பல்கலைக்கழக மாணவர்களுக்குஒப்பானவர்களே.

இத்தகைய போலி வேஷங்கள்- சுயநலப் போக்குகள் விடுதலைப் போராட்டத்திற்கு உதவ மாட்டாது. என்றுஒருவன் தனது இயலுகைக்கு ஏற்றாற்போல் விசுவாசமாக மண்மீது பற்றுக்கொண்டு போராடும் வேங்கைகளுக்கு உதவுகிறானோ அவனே தேசபக்தன்- தேசாபிமானி மற்றெல்லோரும் தன் வீட்டிற்கு முன் குண்டு வெடிக்காத வரை விடுதலை பேசு நடிப்புத் சுதேசிகளே.

# நன்மையும் தீமையும் மனித மனங்களின் தெரிவு

# செபத்தால் விசுவாசம், அன்பு, சேவை வளரும்

## பரமபிதா காட்டிய பாதை



இன்று நாம் ஈழத்திரு நாட்டில் ஏற்பட்டிருக்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கும் மக்களின்மகிழ்ச்சி நிறைந்த எதிர்பார்ப்புக்களும் மக்கள் மனதில் ஏற்பட்ட மனமாற்றமுமே காரணம் ஆகும், முன்பு மனம் வெற்றியை முன்னிலைப் படுத்தி விரும்பியபோது போரும் இப்பொழுது மனம் சமாதானத்தை முன்னிலைப்படுத்தி விரும்புகின்றபோது அமைதியும் கிடைக்கவழி பிறந்திருக்கிறது. நன்மையும் தீமையும் மனிதமனங்களின் தோல்வியில்தான் தங்கியுள்ளன.

மனித மனங்களில் மன மாற்றத்தைக்கொண்டு வரக்கூடிய அற்புதமான ஆயுதம் செபம் அசைக்க முடியாததையும் அசைக்க வைக்கும் வல்லமை செபத்திற்கு உண்டு. மன்றாட்டினால் முடியாததுஎதுவுமில்லை. உள்ளத்தின் ஆழத்தில்இருந்து பிறக்கும் செபம் மனிதனை சகல கட்டுகளிலுமிருந்து விடுவிக்கிறது. செபத்தின்வல்லமையை வேதம் கூறுகிறது. செபித்தவர் அனைவரும் தம்மையும் விடுவித்துக் கொண்டு மற்றவர்களுக்கும் விடுதலை பெற்றுக்கொடுக்கின்றனர்,

இயேசுக் கிறிஸ்துநாதர் தேவகுமாரனாய் இருந்தும் நமக்கோர் நல்ல உதாரணமாகஅவர்செபித்தார். செபித்தால் விசுவாசிக்கலாம், விசுவாசித்தால் அன்புசெய்யலாம், அன்புசெய்தால் பணி புரியும் பக்குவமடையலாம் என்பதனை வாழ்ந்து காட்டினார். அவர்சென்ற இடமெல்லாம் தீமையின் எல்லா கட்டுக்களிலிருந்தும் மக்களைவிடுவித்தார்.

மனம்திருந்திய பாவிக்கு மன்னிப்பு நிச்சயம்உண்டு எனக்காட்ட அவர் கூறிய ஊதாரிமனிதன் உவமையில் ஒரு தகப்பனுக்கு இரு குமாரர்கள் இருந்தார்கள். சொத்தில்தனது பங்கைப் பலவந்தமாக வாங்கிக் கொண்ட இளைய குமாரன் தூரதேசம் செல்கிறான் கெட்ட நண்பர்களுடன் சேர்ந்து தீயவழியில் நடந்துசொத்தெல்லாம் இழந்து குடிக்க கஞ்சிக்கும் வழியில்லாமல் மனம்வருந்தி செல்வந்தனான தனது தகப்பன் வீட்டில் ஊழியனாகவாவது இருக்க வீடுவருகிறான். தகப்பனோ மகனை வெறுக்கவில்லைஅவனை பழையபடிதமது மகனாகவே ஏற்றுக்கொள்கி

**சேவியர் ஜோசவ்**

றார் இந்த உண்மைக்கு பலபக்கங்கள உண்டு அதில் ஒருபக்கம் பிரிந்து சென்ற மகன்பற்றிய ஒழுக்கம் அதனால் விளைந்தஅந்த அன்புள்ளதகப்பனின் அன்றாட மன்றாட்டும் மகன் திருந்தியதற்கு ஒரு காரணமாய் அமைந் திருக்கும். என்றால் மிகையில்லை.

### மனம் மாறிய மகதலேன்

இயேசுவின் வாழ்வில் ஒரு சபபவம், இயேசுவைக் குருவாக ஏற்றுக் கொண்டு நண்பனாக மாறியவர்களில் பெத்தானியாவைச் சேர்ந்த லாசரும் ஒருவர். இவர் பெரிய தனவந்தர் மிகுந்த செல்வாக்குள்ளவர் அவருக்கு இரு சகோதரிகள மூத்தவள மார்த்தா. அற நெறியில் வாழ்ந்து வந்தாள் இளைய சகோதரி 'மகதலேன்' மரியா தன் அழகினாலும் இளமையினாலும் உலகியல் வாழ்க்கையால் கவரப்பட்டு தறிகெட்டு விபச்சார வாழ்க்கை வாழ்ந்து வந்தாள். இதனால் தனது சகோதரனாலும், சகோதரியாலும் ஏன் சமூகத்தாலுமே விலக்கி வைக்கப்பட்டவளாயிருந்தாள் பகிரங்கபாவியான தனது தங்கையைப் பற்றிய கதைவரும் பொழுதெல்லாம் இயேசுவிடம் அதைத்தவிர்த்தனர். மரியா மனம்மாறுவாள் கடவுளுக்குகந்த வாழ்க்கைவாழ அவளால் முடியும் என அவர்களால் எண்ணவே முடியவில்லை. ஆனாலும் பாவிகளைத் தேடி வந்த இயேசு மரியாவின் மன மாற்றத்திற்காகச் செபிக்கும்படி சகோதரர் ஆகிய அவர்களைப்பலமுறை தூண்டினார். மரியாவின் விடுதலை அவர்களின் செப வேண்டுதலில் இருப்பதாகக் கூறினார். விளைவு 'மகதலேன்' மரியாமனம் மாறினாள் யாரும் எதிர்பாராத அளவுமனமாற்றமடைந்து புனிதையாக மாறினார்.

### மற்றவர்களுக் காகச் செபித்தல்

இயேசுவின் பன்னிருதூதர்களில் ஒருவராக விளங்கியவர் சீமோன்பேதுரு இயேசுதாம் தம் தூதர்களினால் கைவிடப்பட்டு தமது மரணத்தின் வாசலில் நிற்கும் போது சீமோன் பேதுரு தம்மைமறுதலிப்பார் என முன்னறிவித்தபோது சீமோனே, சீமோனே இதோ கோதுமையைப் போல் உங்களை புடைக்கச் சாத்தான் அனுமதி கேட்டிருக்கின்றான் ஆனால் நான் உனது நம்பிக்கை தளராதிருக்க உனக்காக மன்றாடினேன் நீ மனம் திருந்தியபின் உன் சகோதரர்களை உறுதிப்படுத்து என்றார். இயேசுவின் செபம் சீமோனுக்கு கைகொடுத்தது இயேசுவுக்குப் பின் திருச்சபையை வழிநடத்திச் சென்றவர் சீமோன் பேதுருவே

செபம் வல்லமை யுள்ளது இயேசு அடிக்கடி செபிக்கக் கண்ட அவரது திருத்தூதர் தமக்கும் செபிக்க கற்றுத் தரும்படிஆண்டவரை வேண்டினார். பரலோக மந்திரத்தை அவர்களுக்கு கற்றுக் கொடுத்து செபம் எப்படி இருக்கவேண்டும் என வகை காட்டினார் பரலோக மந்திரத்தில் இறையாட்சி நம்மிடையே வரவேண்டு மென மன்றாடுகின்றோம் இறையாட்சி மலரப் பாவிகள் மனம்திரும்ப வேண்டும்நாம் எல்லோருமே பாவிகள்தான் ஆனாலும் மீட்பின் ஒளியைக் கண்டவர்கள் மற்றவர்களுக்காக செபிக்க கடமைப் பட்டிருக்கிறார்கள்.

எல்லோரும் தம்மிடம்வரும்படி கடவுள் விரும்புகிறார் எம்மை வெறுப்பவரையும் அன்பு செய்வதின் மூலம் மன்னிக்கும் படி கூறியஎம்ஆண்டவராகியஇயேசுபாவிகளுக்காக துன்புறுவோருக்காக நோயாளிகளுக்காக நாட்டின் விடுதலைக்காக நமதுசெபங்களை வேண்டி நிற்கின்றார்.

இந்தத் தவக்காலத்தில்நாம் செய்யும் நற்கிருத்தியங்களுள் முதன்மையான ஒன்றாக நம் சகோதரர் அயலவர் மனம் மாறி இறைவனை வந்தடைய எமது உள்ளத்தின் ஆழத்திலிருந்து எமது செயல்களை இறைவனை நோக்கி ஏறெடுப்போமாக

இருதயத்துச் சாந்தமும் தாழ்ச்சியும் உள்ள இயேசுவே எமது உள்ளத்தை உமது உள்ளத்தைப் போல் ஆக்கியருளும்.

## கிராம எழுச்சி விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யூ. எல். ஏ. ஐ. டியின்அனுசரணையுடன் யாழ். மாவட்ட சர்வோதய சிரமதான இயக்கம் நடாத்தும் மாபெரும் கிராம எழுச்சி விளையாட்டு விழாவும், பாலர் பாடசாலைத் திறப்பு விழாவும்இன்று காலை 11மணிக்கு த. சுந்தரராஜன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வட்டு மத்திய கல்லூரி அதிபர் எஸ். சிவஞானபோதன், சங்கானை பிரதேச செயலர் எஸ். இரத்தினம் ஆகியோர் பிரதம விருந்தினராக கலந்து கொள்வர்.

(ந- 4)

## திருநெல்வேலியில் இலங்கை வங்கி கிளை

நூறுநாள் வேலைத்திட்டத்திற்கு அமைய திருநெல்வேலி நவீன சந்தைப் பகுதியில் இலங்கை வங்கிக் கிளை ஒன்று திறந்துவைக்கப் படவுள்ளது.

இப்பகுதி வர்த்தகர்களின் வேண்டுகோளுக்கமையவே மேற்படி கிளையை திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜன் தெரிவித்தார்.

(உ-19)

## தினசரி தியானம்

### கண்ணீர்

துன்பக்கண்ணீரில் நுளைந்தெற்குன் ஆனந்த
இன்பக்கண்ணீர் வருவது எந்நாள் பராபரமே!

— தாயுமானவர்

களிமண்ணைத் தண்ணீர் பக்குவப்படுத்துகிறது. என் உள்ளத்தைக் கண்ணீர் பக்குவப்படுத்துவதாகுக.

மண்ணில் விளைவை உண்டுபண்ண மழை பெய்கிறது. துன்பக்கண்ணீர் உள்ளத்தைத் திருத்திச் செப்பனிடுகிறது. கார்மேகம் சூழ்வது பூமியைக்குளிர செய்வதற்காக. நனைந்து குளிர்ந்த பூமியினின்று விதை முளைக்கிறது. துயரம் என்னும் மேகத்திலும் மழையிலும் மூடப்பெற்ற உள்ளம் ஞானவிளைவுக்கு ஏற்றதாகிறது. விகாரம் உள்ளத்தை உழுகிறது, துன்பம் அதை மிருதுவாக்குகிறது. பின்புஞானோதயம்உண்டாகிறது.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்



## தவக்கால கிறிஸ்தவ சிந்தனைகள் (26)

**தவக்காலம் - நான்காம் ஞாயிறு (ஊதா)**

**திபா 23:1-6 'ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறைவில்லை'**

இன்றைய நற்செய்தி நிகழ்வு 'இயேசு உலகின் ஒளி' என்று அறிக்கையிடுகிறது. விடுதலை நல்கும் இந்த ஒளியாம் இயேசுவை ஏற்காத நிலையில் தொடர்ந்து இருளில் நிலைக்க நேரிடும் என்றும் எச்சரிக்கிறது.

பிறவியிலேயே பார்வையற்றவர் இயேசுவின் உதவியால் பர்ர்வை பெற்றவுடன் இயேசுவின் ஞானஒளியிலும் பங்குகொள்கிறார். 'நான்றாகப் பார்க்கிறோம்' என்று மார்தட்டியவர்கள் இருளில் வீழ்ந்ததையும் யோவான் தெளிவாக வடிக்கிறார். ஒளி பெற்றவர் பயமோ, தயக்கமோ இன்றி இயேசுவுக்கு சாட்சி சொல்கிறார். இயேசுவின் அருகிலிருந்தும் அவரைக் கண்டுகொள்ளாதவர்களின் அகக்கண்கள் கட்டப்பட்டுக்கிடக்கின்றன. தாழ்ச்சியான உள்ளத்துடன் நம் இதய தீபத்தில் இயேசுவை வரவேற்போம். அவர் அங்கு குன்றாத ஒளியாக என்றும் எரியட்டும்.

- காவலன்

போஷாக்கிற்கு
ஜீவாகாரம்

வளரும் பிள்ளைகளுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஏற்ற சத்துணவு
உணவிற்கு தயார் நிலையில் உள்ள ஒரு முழு உணவு
அண்ணா தொழிற்சாலை
இணுவில்
T.P- 3565

# மன்னார் நோக்கிச் சென்ற பஸ்சில் இனந்தெரியாதோர் கொள்ளை

## நொச்சியகமவில் துணிகரச் சம்பவம்

(கொழும்பு)

கொழும்பு பஸ் நிலையத்திலிருந்து மன்னார் நோக்கிப் புறப்பட்டுச் சென்ற பிரயாணிகள் பஸ் வண்டி ஒன்று புத்தளத்திற்கும் அனுராத புரத்திற்கும் இடையே நொச்சி யகம என்னும் இடத்தில் வைத்து இனந்தெரியாதோரால் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளதாக நொச்சி யகம பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான இந்த பஸ்சில் பிரயாணம் செய்த பெண்களின் உடமைகள், பெறுமதி மிக்க நகைகள் மற்றும் பணம்என்பன கொள்ளை அடிக்கப்பட்டுள்ளதாகவும், இலக்கத் தகடு இல்லாத வெள்ளை வானில் வந்த முக மூடி அணிந்த இளைஞர்களே இக் கொள்ளையில் ஈடுபட்ட தாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

---

## மட்டக்களப்பு..

படிக்கையின்படி விடுதலைப் புலிகள் இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள் ஆறு நாட்கள் தங்கியிருக்கலாமென கூறப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டு 30 நாட்களில் 50 பேரும் 60 நாட்களில் 100 பேரும் 90 நாட்களில் அனைத் துப் புலி உறுப்பினர்களும் இரா ணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக் குள் வரமுடியுமென குறிப்பிடப் பட்டுள்ளது ஏற்கனவே தெரிந் ததே (வ)

---

## துணைவேந்தருக்கு..

வரும் 23ந் திகதி நல்லூர் துர்க் காதேவி மணிமண்டபத்தில் ஓய்வுபெற்ற அதிபர் க.சிவராம லிங்கம் தலைமையில் நடை பெறும் இதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது (ந)

---

## பிரதமர்...

திறக்கவேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாதைதிறப் பதை வலியுறுத்தி புரிந்துணர்வு உடன்படிக் கையை கண்கா ணிக்கவந்துள்ள சர்வதேச கண்கா ணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் றெண்ட பியூறு ஹொவ் டேயிடம் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் கடந்த புதன்கிழமை கிளிநொச்சியில் வைத்து கூறியிருந்தார்.

இதேவேளை, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு இப் பாதைதிறப்பு விடயமாக சில உத்தரவுகளையும் பிரதமர் ரணில் அண்மையில் பிறப்பித்தி ருந்தார்.

பிரதமரின் உத்தரவுக்கிணங்க இராணுவத்தினரின் முன்னரங்க காவல்அரண் பகுதியான எழுது மட்டுவாள் பகுதியிலுள்ள இரா ணுவமையம் தற்போது பலப்ப டுத்தப்படுவதாக தென்மராட்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

எழுதுமட்டுவாள் பகுதியில் சுமார் 20ஏக்கர் காணியில் ஆனையிறவைப்போல் பாரிய இராணுவத்தளம் அமைக்கப் பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந் நிலையில் 15ம்திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ள பிரதமர் ரணில்விக் கிரமசிங்கா கடந்த 10வருடங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்த கண்டி வீதியை திறந்து வைப் பார் என நம்பத்தகுந்த வட்டாரங் கள் செய்தி வெளியிட்டுள்ளன.

யாழ்ப்பாணம் வரும் பிரதமர் ரணில் நல்லூரில் நடைபெற வுள்ள பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றுவார் எனவும், இதற் கான ஏற்பாடுகளை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ் வரன் மேற்கொண்டு வருவதாக வும் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

---

## யாழ்...

எனவும்,யாழ்ப்பாணம், மட்டக் களப்பு, வவுனியா, திருகோண மலை ஆகிய மாவட்டங்களில் வெகு விரைவில் அரசியல் காரியாலயங்களை திறக்கவுள் ளதாகவும் அவர் தெரிவித் துள்ளதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)

மில்க்வைற்
மக்கள் மனதில்
மங்காப் புகழ் பெற்றது!
மில்க்வைற் சோப்
இண்டஸ்றியல்ஸ்
527, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 3541

# இளம் சிறார்களில் தாயின் பிரிவு..

தாயை நீண்டகாலம் பிரிந்து இருப்பதும் சிறுவர் துஷ்பிரயோகங் களுக்கான இன்னுமொரு காரணமாகும்.எக்காரணத்தைக் கொண்டும் தாய் நீண்டகாலம் பிரிந்திருப்பது அக் குடும்ப உறுப்பினர்களுக்குப் பாரிய தாக்கத்தை உண்டு பண்ணும். பிள்ளைகளின் வாழ்க்கையைப் பொருத்தமானதாக ஆயத்தஞ் செய்தல், நல்ல பழக்க வழக்கங்களைப் புகட்டுவது, சமுதாயத்தில் நல்லவை, கெட்டவைகளை இனங்காணவைப்பது, பிள்ளையின் அன்பு, பாதுகாப்பை உறுதிப்படுத்தல் போன்றன தாயின் மூலமாக நிறைவேற்றப்படும் முக்கிய செயற்பாடுகளாகும். இவை கிடைக்காத பிள்ளைகள் துஷ்பிரயோகங்களின் பால் திசை திருப்பப்படலாம் என சமூக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

க. செந்தூரன்
4ம் வருடமருத்துவ மாணவன்.




உங்கள் தொடர்புகளுக்கான
எங்கள் முகவரி,

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு,
அறை 30, போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
தொ. பே:-021-2261 EXT - 274

சிறுவர் பாதுகாப்பு(ஐ. இ)அனுசரணையுடன் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினரின் வெளியீடு

(C/3688)

## வாழ்த்துகின்றோம்



மணிவிழாக் காணும் யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தரும், மூத்த பேராசிரியருமான உயர்திரு. பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் தமிழ்மக்களுக்கு ஆற்றிவரும் கல்வித்தொண்டு, சமூகத் தொண்டு, தொடர இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

பிரதேச சபை
நல்லூர்
திருநெல்வேலி

தலைவர், உறுப்பினர்கள்,
செயலாளர்,
உத்தியோகத்தர்கள்

(C/3689)

## அறிவித்தல்

சீமெந்துப் பொதுத் தொழிலாளர் யூனியன்
அங்கத்தவர்கள் கவனத்திற்கு

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்குப் பொறுப்பான அமைச்சர் கௌரவ றோகிதா போகல்லகம அவர்கள் கா.சீ. கூட்டுத்தாபன ஊழியர்களைச் சந்திக்க உள்ளார்.

இடம்:- யாழ்.கச்சேரி கேட்போர் கூடம்
காலம்:- 12 – 03 – 2002 செவ்வாய்க்கிழமை
நேரம்:- காலை 8.00 மணி

அனைத்து அங்கத்தவர்களும் குறிப்பிட்ட நேரத்திற்குத் தவறாது சமுகம் தரவும்.

K.கனகநாயகம்
செயலாளர்

ப.பாலகிருஷ்ணர்
தலைவர்

(4804)

# கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயக் காட்சிகள்





யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையுடன் அருட்திரு.எ.ஜெகதாஸ அருட்திரு.எம்.மொன்பேட், அருட்திரு.ராஜநாயகம் ஆகியோர் காணப்படுகின்றனர்.

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.03.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.